விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 26 ஐப்பசி 25 ஸபர் 16 இதழ் 269
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 10-11-84

## கொழும்பில் இடம்பெற்ற குண்டுவெடிப்புச்சம்பவங்கள்: பொறுப்பான இயக்கம்

[கொழும்பு]

ஒப்ரேய்ஹோட்டலில்இடம் பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவம், கொழும்பு புளூமென்டல் வீதியிலுள்ள எண்ணெய்க் குழாய்களுக்கு குண்டுவைத்தமை, கடந்த மாதம் 22ம் திகதி கொழும்பின் பல்வேறு பகுதிகளிலும் இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவங்கள் ஆகியவற்றிற்கு ஈழ புரட்சிகர மாணவர் இயக்கமே பொறுப்பு என பொலிஸ் விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளதாக அரசாங்கத்தின் தொடர்பு சாதன கமிட்டித் தலைவர் டாக்டர் விக்கிரமவீரசூரியா தெரிவித்தார்.

பாதுகாப்பு அமைச்சில் நேற்று நடைபெற்ற பத்திரிகை ஆசிரியர்களின் மகாநாட்டிலேயே டாக்டர் விக்கிரம வீரசூரியா இத்தகவலைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்துள்ளதாவது:-

''இந்த இயக்கம் மார்க்ஸிஸ இயக்கமாகும். இதன் தலைவர் இளையதம்பி இரத்

(8ம் பக்கம் 4ம்கலம்பார்க்க)

● யாழ். நகரில் நேற்று நண்பகல்

# குண்டுவெடிப்பு! துப்பாக்கிசூடு!

# சிலர் பலி!! பலர் காயம்!!!

## கிலிகொண்ட மக்கள் புகலிடம்தேடி சிதறிஓடினர்!

(நமது அலுவலக நிருபர் ஏ. வி. மாணிக்கம்)

யாழ். நகரில் நேற்று நண்பகல் சுதந்திரமாகவும், சுறுசுறுப்பாகவும் தத்தம் கருமங்களில் ஈடுபட்டுக்கொண்டிருந்த அப்பாவி மக்கள் மத்தியில் திடீரெனக் குண்டு வெடித்ததுடன், துப்பாக்கிப் பிரயோகமும் இடம்பெற்றது! இதனைத் தொடர்ந்து நகரம் அல்லோலகல்லோலப்பட்டது!

இச்சம்பவத்தின் போது 8 பேர் இறந்துவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டபோதிலும், ஐவரின் சடலங்களே யாழ். ஆஸ்பத்திரியிலும் (3), தெல்லிப்பழை ஆஸ்பத்திரியிலும் (2) வைக்கப்பட்டிருந்தன. மூன்று பெண்கள் உட்பட சுமார் 35 பேர் படுகாயமுற்று யாழ். ஆஸ்பத்திரி 25ம் வார்ட்டில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

### பலியான சிலரின் விபரங்கள்

வ.பி.போ. வ. சபை சாரதி வி சரவணமுத்து (46 வயது- நாவற்குளி, தச்சன்தோப்பு).

மினிபஸ் கண்டக்டர் இரத்தினம் மனோகரன் (19 வயது- சங்கானை).

மானிப்பாய் சிறுவர் இல்லத்தைச் சேர்ந்த செல்வன் திலொக் (12 வயது).

தர்மலிங்கம் வர்ணகுலேந்திரன் 29 வயது-சுதுமலை).

#### தெல்லிப்பழை ஆஸ்பத்திரி பிரேத அறையில்

சின்னத்துரை ஜெயக்குமார் (22 வயது-குரும்பசிட்டி).

55 வயதுள்ள ஒருவரின் சடலம் அடையாளம் காணப்படவில்லை.

இச்சம்பவம்பற்றிக் கூறப்படுவதாவது:-

சுமார் 11-15 மணியளவில் ஹெலிகாப்டர் ஒன்று யாழ் நகரில் தாழப்பறந்து சென்றது. 11-30 மணியளவில் யாழ் ஆஸ்

(5ம் பக்கம் 3ம் கலம் பார்க்க)

### நிபந்தனையின்றி விடுதலை

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பில் அண்மையில் கைதாகி பின்னர் விடுதலை

(5-ம் பக்கம் 3ம் கலம் பார்க்க)

### படுகாயமடைந்தோர் பட்டியல் இது

படுகாயமடைந்தவர்கள் விபரம்:

யாழ் பல்கலைக்கழக மருத்துவபீட மாணவியான செல்வி மாலதி நாகேஸ்வரன் (23-வயது) இராசாவின் தோட்டம் யாழ்ப்பாணம், இவர் வ பி போ. வ. சபை பஸ்ஸுக்குள் வைத்தே துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்கானார். திருமதி சரோஜினிதேவி காசிப்பிள்ளை (35-வயது) கோப்பாய் வடக்கு, திருமதி ஜி. மிராண்டா (34-வயது) கச்சேரி கிழக்கு ஒழுங்கை.

வெற்றிவேலு பாலசுந்தரம் (35-வயது) சண்டிலிப்பாய்

(8-ம் பக்கம் 4ம்கலம்பார்க்க

## சுறுசுறுப்பாக இயங்கிய யாழ். ஆஸ்பத்திரி!

### இரத்தம் உடன் தேவைப்படுகிறது

[யாழ்ப்பாணம்]

யாழ். நகரில் நேற்றுநண்பகல் இடம்பெற்ற ஆயுதப் படையினரின் துப்பாக்கிச்சூட்டுக்காயங்களினால் பாதிக்கப்பட்டவர்கள் அவசரம் அவசரமாக யாழ். ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

காயமுற்றோருக்கு சிகிச்சை அளிப்பதில் யாழ். ஆஸ்பத்திரி வைத்தியஅதிகாரி தொடக்கம் சிற்றூழியர் வரை சகலதரத்திலும் உள்ளவர்கள் சுறுசுறுப்

[5ம் பக்கம் 5ம் கலம் பார்க்க]

## இளைஞர்களின் முன்மாதிரி!

(யாழ்ப்பாணம்)

நேற்று நண்பகல் தொடக்கம் மாலை 6 மணிவரை பிரயாணவசதியற்றிருந்த பாடசாலை மாணவர்களையும், பிரயாணிகளையும் சொந்தஇடங்களுக்கு கொண்டுபோய்ச் சேர்ப்பதில் இளைஞர்கள் சிலர் அக்கறைசெலுத்தியிருந்தனர்.

இளைஞர்கள் தாங்களாகவே மினிபஸ்களிலும் பஸ்களிலும் பிரயாணிகளை ஏற்றிக் கொண்டுபாதுகாப்பானஇடங்களில் இறக்கிவிட்டனர். இந்த இளைஞர்களின் துணிச்சலான, விவேகமான செயலை பொதுமக்கள் பெரிதும் பாராட்டினர்.

உ

சிவமயம்

### திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் இரத்தாக்ஷி வருடம் ஐப்பசி மாதம் 26ம் திகதி (11-11-1984) ஞாயிற்றுக்கிழமை பகல் 10-42 மணி தொடக்கம் 1-58 மணிவரையுள்ள சுபமுகூர்த்த வேளையில்,

எமது சிரேஷ்ட புத்திரன்
திருநிறைச்செல்வன்
**தி. ஞானசம்பந்தன்**
(BSc Eng) பொறியியலாளர்
லங்கா சீமெந்து லிமிட்
காங்கேசன்துறை
அவர்களுக்கும்

எமது
புத்திரி
திருநிறைச்செல்வி
**கி. மோகனதேவி**
அவர்களுக்கும்

வண்ணை வெங்கடேசர் ஆலயத்தில் திருமணம்செய்ய பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்பத்தாரும் சமுகம்தந்து சிறப்பிக்குமாறு வேண்டுகிறோம்.

இங்ஙனம்

தங்கள் நல்வரவை நாடும்

[தனிப்பட்ட அழைப்புகள் இல்லை]

**திருமதி தியாகராஜா**
அமரர் டாக்டர்
ஏ தியாகராஜா
[MA. M. LITT]
அவர்களின் பாரியார்
ஆயிலி, காரைநகர்.

**கே. கிருஷ்ணபிள்ளை**
பிரபல வர்த்தகர்
'கிருஷ்ணா ரேடர்ஸ்'
23, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

681

"உண்மையை அறிய

## சித்திரவதைக்குப் பதில் கருவிகளை பயன்படுத்தலாம்"

### மட்டு. பிரஜைகள் குழு யோசனையை அமைச்சர் லலித் ஏற்றார்

[மட்டக்களப்பு நிருபர் இரா. உதயகுமார்]

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்படுவோரைச் சித்திரவதைசெய்வதை நிறுத்தி மேற்கு நாடுகளில் உண்மையைக் கண்டுபிடிக்க உபயோகப்படுத்தப்படும் கருவிகளைப் பயன்படுத்தும்படி மட்டக்களப்புப் பிரஜைகள் குழு விடுத்த கோரிக்கையை தேசியபந்தோபஸ்து அமைச்சர் திரு. லலித்அத்துலத்முதலி ஏற்றுக் கொண்டு, ''இந்த முறைதான் எனக்கும் விருப்பம்; ஆனால் சிலர் இதனை விரும்புகிறார்

(5-ம் பக்கம் 4ம் கலம்பார்க்க)

## வவனியாவில் நேற்று 100 பேர் விசாரணை

[வவனியா]

வவனியா நகர நேற்று நண்பகல் இராணுவத்தினரால் சுற்றிவளைக்கப்பட்டு சுமார் நூறுபேர் கைதுசெய்யப்பட்

(5-ம் பக்கம் 5ம் கலம் பார்க்க)

# அசி ஊளம்பரம்

## விற்பனைக்கு

இறைச்சிக் கோழிகள் உடனடி விற்பனைக்குண்டு, விலை குறைவு. சீமாட்டி பாம்ஸ், ஸ்ரேசன் வீதி, மயிலங்காடு. சுன்னுகம். 600

ISUZU ELF 250 நல்லநிலையில் விற்பனைக்குள்ளது. றீகல் சினிமா யாழ்ப்பாணம். 651

பழைய ஓடுகள், பனைமரங்கள், கதவு, யன்னல்கள் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு; க. சிவா: No. 9, மாட்டீன் லேன், யாழ்ப்பாணம். 667

7 ஸ்ரீ தொடர்பிலக்க மொறிஸ் (OXFORD) காரும், C D 125 (TWIN) ஹொன்டா மோட்டார் சைக்கிளும் நல்ல நிலையில் உடனடியாக விற்பனைக்குண்டு. அ. ரவீந்திரதாஸ், அம்மன் கோவிலடி, வல்வெட்டித்துறை. 654

மன்னுரில் கட்டுக்கரைக் குளப் பாய்ச்சலில் 5 ஏக்கர் நெற்காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: நா.செல்வத்துரை, குப்பிளான் தெற்கு அல்லது செ சுந்தரலிங்கம், அரிசிஆலை, ஆள்காட்டிவெளி 596

அளவெட்டியில் 'வாரி சீமாரோட்' கணேஸ்வரத்தில் வீடு கட்டுதற்குரிய ½ பரப்பு மேட்டுக்காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: த. தர்மச்சந்திரன், 'சந்திர வாசம்' வில்சன் வீதி, கிளிநொச்சி. 670

கொண்டா 350 மோட்டார் சயிக்கிள் உடன் விற்பனைக்கு உண்டு. அல்லது கொண்டா 125க்கு மாற்றுவதற்கும் தொடர்பு கொள்ளவும். க. சுரேஷ், உபதபால் நிலையம், சங்கத்தானை, சாவகச்சேரி. 669

அழகான நல்ல நிலையிலுள்ள வானெலிப் பெட்டி பிலிப்ஸ், 7 வால்வ்ஸ் மெயின்ஸ் விற்பனைக்குண்டு தொடர்பு: 78. அரசடி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 22484 (630)

இல்லம் அமைப்பதற்குரிய மூன்று பரப்புக் காணி நல்லூர் கந்தசாமி கோவில் வடக்கு வீதியில் விற்பனைக்குண்டு. தொடர்பு: விளம்பர இல. 657, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 657

யாழ்ப்பாணம் கச்சேரி நல்லூர் வீதியில் நல்லூர் கந்தசுவாமி கோவிலுக்கு அண்மையில் வீடுகட்டுவதற்கு சிறந்த ஒரு பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்க: G. A. செபஸ்றியாம்பிள்ளை, 17/2, மருதடி வீதி, யாழ்ப்பாணம். 625

## தவறிவிட்டது

கடந்த புதன்கிழமை 7-11-84 இரவு புத்தூருக்கும் கோப்பாயிற்கும் இடையில் பருத்தித்துறை வீதியில் எனது மோட்டார் சைக்கிளின் (CD 125 பிறவுண்ராங்க மொடல்)பற்றறி சைட் கவர் தவறிவிட்டது. கண்டெடுப்பவர்கள் தயவுசெய்து பா. தயாளன், 37, பிரப்பங்குளம் வீதி, வண்ணுர்பண்ணை, யாழ்ப்பாணத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். 658

## வாடகைக்கு

கொழும்புத்துறை பிரதான வீதியில் சென். யோன்ஸ் சுண்டுக்குளிப் பள்ளிக்கூடங்களுக்கு அருகாமையில் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்குண்டு. திருமதி நாகநாயகம், 84, கொழும்புத்துறை வீதி, யாழ்ப்பாணம். 662

யாழ். கச்சேரிக்கு அண்மையில் நல்ல சுற்றுடலில் தண்ணீர் வசதியுடன் புதிய, நவீன மாடி வீடு மூன்று படுக்கை அறைகளுடன் வாடகைக்கு உண்டு. தொலைபேசி வசதியும் வீட்டில் இருக்கிறது. தொடர்பு: விளம்பர இல: 671, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 671

கொக்குவில் இந்துக் கல்லூரிக்கு அண்மையில் உள்ள வீடு (மேல் வீடு) சகலவசதிகளுடன் வாடகைக்கு கொடுக்கப்படும். தொடர்பு:- பாலகுமார், 81, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். 618

கொக்குவில் கே. கே. எஸ். வீதி, 3-ம் கட்டையடியில் சகல வசதிகளும் அடங்கிய வீடு வாடகைக்குண்டு கு.பாலசுந்தரம், 54, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். T. P. 22454. 622

## தேவை

நல்லூர் இந்து விடுதி உணவுச்சாலையில் பணியாற்றுவதற்கு ஆண்/பெண் ஊழியர்கள் தேவை ஞாயிறு (11-11-84) காலை 9 மணி தொடக்கம் 12 மணிவரை நல்லூர் இந்து விடுதிக்கு சமூகம் தரவும். நிர்வாகி, இந்து விடுதி, உணவுச்சாலை, நல்லூர். 644

யாழ். நகரில் பிரபல்யமான வியாபார ஸ்தாபனமொன்றிற்கு நாற்பது வயதுக்குட்பட்ட அனுபவமுள்ள விற்பனையாளர்கள் தேவை. ஆங்கில அறிவு விரும்பத்தக்கது. மின்பொறி உபகரணங்கள் தெரிந்தவராகவும் இருத்தல் வேண்டும். தாங்கள் கோரும் சம்பளத்துடன் கிராம சேவையாளரின் நற்சாட்சிப் பத்திரத்துடனும் 17-11-84க்கு முன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 665, ஈழநாடு மேற்பார்த்து, யாழ்ப்பாணம். 665

## பயிற்சி

எலெக்றிக்கல் வயறிங், வெல்டிங், றேடியோ, T. V. செய்முறைப் பயிற்சியுடன் இவ்வருடத்திற்கான கடைசிப் பிரிவு ஆரம்பமாகின்றது. 14-11-84 J. E. C 33, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். 646

## வகுப்புகள்

G. S. Q. (Maths), B. Sc (Maths), G. S. Q. (Bio)' B. Sc. (Bio), Montessori Diploma Teachers Tr ining Course (பாலர் ஆசிரியர் பயிற்சி), Home Science Diploma Course (மனையியல் பயிற்சி) மேற்படி வகுப்புகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. 30-11-84 க்கு முன் விண்ணப்பிக்கவும். அதிபர், உயர்கலைக் கல்லூரி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். 634

## கிளிநொச்சி வாசகர் வட்டம் நாளை கூடுகிறது

(கிளிநொச்சி)

கிளிநொச்சி 'ஈழநாடு' வாசகர்வட்ட செயலவைக் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை கிளிநொச்சி கனிஷ்ட மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

## இந்திரா மறைவினுல் நிலை தடுமாறியகார்

(சாவகச்சேரி)

அன்னை இந்திராவின்மரணச் செய்தி கேட்டு ஆத்திரம் கொண்ட கார்ச்சாரதி ஒருவர் கட்டுப்பாட்டின்றிக் காரைச் செலுத்தியதன் காரணமாக, வீதியில் நின்ற ஒருவர் காரினுல் மோதுண்ட சம்பவம் ஒன்று சாவகச்சேரியில் இடம் பெற்றது.

இச்சம்பவத்தின் காரணமாக சாவகச்சேரி இராமலிங்கம் வீதியைச் சேர்ந்த இரா நிர்மலன் என்பவர் சிறுகாயங்களுடன் உயிர்தப்பியுள்ளார்

மேலும் இவ்விபத்து பற்றி அக்கார்ச் சாரதி தெரிவிக்கையில், இந்திரா காந்தியின் மறைவுச் செய்தியினுல் நான் மிகவும வேதனைப் பட்டிருந்ததாலேயே காரினை மிகவும்வேகமாகச் செலுத்த நேரிட்டது எனக் கவலையுடன் தெரிவித்தார்.

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

காலஞ் சென்ற மணியர் ஐயாத்துரை பெண் திலகவதியின் மரணசாதனமில்லா சொத்துக்களின் விடயத்தில்,

— மரணமெய்தியவர்

மரணசாதன நியாயாதிக்கம் ரி/

மணியர் ஐயாத்துரை அரசடி கொக்குவில், மேற்கு, கொக்குவில்,

— மனுதார்

எதிராக

1. மணியர் ஐயாத்துரை மகள் அருந்ததி (பராயமற்றவர்)
2. முதலித்தம்பி சுப்பையா, இருவரும், கொக்குவில் மேற்கு, கொக்குவில். 2ம் எதிர்வாதி 1ம் எதிர்வாதியின் சட்டப் பாதுகாவலர் ஆவார்.

— எதிர்வாதிகள்

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதன வழக்குமேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்து போனவரின் மரணச் சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில்தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளைபதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1984ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 28ந் திகதி முற்பகல் 9-00 மணிக்கு இந் நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்ருனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

இன்று 1984ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 1ந் திகதி.

நீதிமன்றக் கட்டளைப்படி

**கு. குலசிங்கம்**
பதிவாளர்

திகதி 16-11-1984வரை நீடிக்கப்பட்டுள்ளது.

நீதிமன்றக் கட்டளைப்படி

**கு. குலசிங்கம்**
பதிவாளர்
642

## மின்னல் தாக்குதல்: பனைவடலி சாம்பலானது

[மட்டுவில்]

மின்னல் தாக்குதலிலிருந்து ஒரு குடும்பம் மயிரிழையில் உயிர் தப்பியது! பனை வடலி ஒன்று எரிந்து சாம்பலானது!

இச்சம்பவம் கல்வயல் பகுதியில் ஒரு வீட்டிற்கு அருகாமையில் இடம்பெற்றுள்ளது.

வீட்டிற்கு சுமார் 100 யார் தொலைவில் நின்ற பெரியபனை வடலி ஒன்றை இந்த மின்னல் தாக்கியதைத் தொடர்ந்து, பனை வடலி எரிந்து சாம்பலானது.


BECON
STUDY CENTRE
(ஸ்ரீதர் முன்பாக)
DAY CLASS
12-11-84ல் ஆரம்பமாகின்றன.
தூயகணிதம்:- தொடர், நுண்கணிதம்
பிரயோக கணிதம்:- மொத்தல், உராய்வு
ஆசிரியர்;
A. பத்மநாதன்


உ
ஓம்

## திருமண அழைப்பு

அன்புடையீர்,

நிகழும் இரத்தாக்ஷி ஞூ ஐப்பசித் திங்கள் 25-ம் நாள் (10-11-84) சனிக்கிழமை பிற்பகல் 1-0 மணி முதல் 2-15 மணி வரையில் வரும் கும்பலக்கின சுப முகூர்த்த வேளையில்

எமது சிரேஷ்ட புத்திரன் திருநிறைசெல்வன் **ஸ்ரீபாஸ்கரன்** (பங்காளர், நியூரோன்எலெக்றிக்கல்ஸ், யாழ்ப்பாணம்) அவர்கட்கும்

எமது கனிஷ்ட புத்திரி திருநிறை செல்வி **குமுதினி** அவர்கட்கும்

நல்லூர் சிவன் கோயிலில் திருமாங்கல்ய தாரணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் குடும்ப சமேதராய் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்ருேம்.

இங்ஙனம்
தங்கள் நல்வரவை நாடும்

**து. அழகரத்தினமும்,** (நிர்வாக இயக்குனர், நியூரோன் எலெக்ரிக்கல்ஸ், யாழ்ப்பாணம்)
திருமதி **P. அழகரத்தினமும்,**
28, சேர். பொன் இராமநாதன் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

**து. ஸ்ரீபத்மநாதனும்,** (முகாமையாளர், அரச வடிசாலைக் கூட்டுத்தாபனம், யாழ்ப்பாணம்)
திருமதி **ஸ்ரீபத்மநாதனும்,**
69, வைமன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

(593)


இன்று 10-11-84
மங்களகரமான
திறப்பு விழா
★ பிரிந்தா ரவல் சேவிஸ் ★

PRINTHA
TRAVEL
SERVICE
(AIR AGENTS)
★ பாஸ்போர்ட் விமான டிக்கட்டுகள், விசா, பிரயாணிகள் காசோலைகள்
★ சிங்கப்பூரில் தரமான வீடுகளில் பணிப் பெண்களாய் வேலை பெற விரும்புவோர்
★ யாழ் கொழும்பு K. T. M. BUSஇல் சொகுசான ஆசனங்களைப் பதிவு செய்ய
★ கலர் புகைப்படச் சுருள்களை PROCESSING AND DEVELOPMENT

மேற்குறிப்பிட்ட விபரங்களுக்கு எம்முடன் தொடர்பு கொள்ள அன்புடன் அழைக்கின்ருேம்.
பிரிந்தா ரவல் சேவிஸ்
61, ஆஸ்பத்திரி வீதி,
சத்திரம் சந்தி, யாழ்ப்பாணம்.
[659]

# ‘குருநாநக் தினத்தில் பொற்கோயில் பொலிவிழந்து காணப்பட்டது!

## இறந்த சீக்கியர்களுக்கு அஞ்சலி செலுத்துகிறோம்” — பிரதமகுரு

அமிர்தஸரஸ், நவ.9 சீக்கியமத ஸ்தாபக ரான ‘குருநாநக்’ கின் பிறந்த தினம் நேற்று இ ந் தி யா வி ல் அமை தியாக அனுஷ் டிக்கப்பட்டது. ஆயி னும் சீக்கியர்களின் மிகமுக்கிய வழிபாட்டுத் தலமான அமிர்தஸரஸ் பொற்கோயில் பொலி விழந்து காணப்பட்டது. இங்கு வ ழ மை ய ா ன ‘குருநாநக்’ பிறந்த தின நி க ழ் ச் சி க ள் இ ட ம் பெ ற வி ல் லை. அமைதியான பிரார்த் தனை மட்டுமே நடத்தப் பட்டது.

‘பொற்கோயில்’ பிரதம குரு இதுபற்றித் தெரிவித்த தாவது: ‘‘நாம் இத்தடவை குருநாநக்கின் பிறந்ததினத் தைக் கொண்டாடவில்லை. புதுடில்லியிலும், இந்தியா வின் ஏனைய பகுதி ளிலும் கலவரங்களால் கொல்லப் பட்ட சீக்கிய இனத்தவர்க ளுக்காகப் பிரா ர் தி க் கின் றோம்’’ என்றார்.

இதே வேளை இத்தடவை ‘பொற்கோயிலில்’ கூடிய பக் தர்களின் தொகை கடந்த வரு டத் தொகையின் அரைவா சிக்கும் குறைவாகவே இருந்த தென்று தெரிவிக்கப்பட்டது. வழமையாக ‘குருநாநக்’ பிறந்ததின வை ப வ த் தின் போது பொற்கோயில் விழாக் கோலம் பூண்டிருக்கும். அதன் கட்டிடங்கள் யாவும் மின் அலங்காரம் செய்யப்பட்டிருக் கும். ஆனால் இம்முறை அவை எதுவும் இருக்கவில்லை.

அமிர்தஸரஸ், ம ற் று ம் ஏனைய முக்கிய சீக்கிய நகரங் களில் புதுடில்லி உட்பட இந் தியாவின் ஏனைய இடங்களி லிருந்து வந்த சீக்கிய இனத் தவர்களே நிறைந்து காணப் பட்டனர்.

இவர்கள் தமது உடமைகள், மற்றும் இனத்தவர்களைப் பறி கொடுத்து அகதிகளாக வந் துள்ளனர். மேலும் பலர் பீதி யினால் தொடர்ந்து வந்து கொண்டிருக்கின்றனர் என்று கூறப்பட்டது.

பொற்கோயில் பிரதமகுரு: ‘‘இந்திராவின் மறைவையடு த்துஇடம்பெற்ற கலவரங்கள் நன்கு திட்டமிட்டு மேற் கொள்ளப்பட்டவை. சீக்கியர் களை அழிப்பதே அவற்றின் முக்கிய நோக்கம்’’என்றார்

அமிர்தஸரஸிலும், ஏனைய சுற்றுப்புற நகரங்களிலும் பாதுகாப்புத் த டை க ளு ம், கண்காணிப்பு நிலையங்களும் போடப்பட்டுள்ளன. (கி)

## றீகனின் வெற்றி முன் கூட்டியே ஆருடம்!

(யாழ்ப்பாணம்)

அமெரிக்க ஜனாதிபதி றீக னின் வெற்றியை முன்கூட் டியே தாம் அறிவித்திருந்த தாக சோதிடர் வேலணை திரு வி. ஏ. சிவராசா தெரி வித்தார். 1984ல் அவரே மீண் டும் பதவிக்கு வருவார் என்று அவர் தெரிவித்திருந்தது குறிப் பிடத்தக்கது,

## எம். ஜி. ஆருக்காக கூட்டுப் பிரார்த்தனை

(வேலணை)

வேலணை கிழக்கு நேதாஜி சனசமூகத்தினர் தமிழக முதல மைச்சர் திரு எம். ஜி. ராமச்சந்திரன் விரைவில் சுக மடைய வேண்டுமென்று பிரார்த்தித்து நிலையமண்டபத் தில் திரு மு. குருநாதன் தலை மையில் கூட்டுப்பிரார்த்தனை யொன்றினை நடாத்தினர்,

## யூகோ ‘ஜூடோ’ வீரர்கள் தெ. ஆபிரிக்காவில் தஞ்சம்!

டேர்பன், நவ 9 தென்னாபிரிக்க அரசாங்கம் மூன்று யூகோஸ்லாவியா விளை யாட்டு வீரர்களுக்கு அரசியல் புகலிடம் வழங்கியுள்ளது

இந்த 3 பேரும் யூ கோ ஸ் லாவியாவின் பிரபல ஜூடோ சம்பியன்களாவர் இவர்கள் கடந்தமாதம் தென்னாபிரிக்கா வுக்கு அரசியல் புகலிடம்கோரி வந்திருந்தனர். ஆ யி னு ம் நேற்றே புகலிடம் வழங்கப்பட் டது.

இம் மூவரினதும் பெயர்கள் வெளியிடப்படவில்லை. இவர் களின் கு டு ம் ப த் தவர்கள் யூகோஸ்லாவியாவில் இருப்பத னால், அவர்களுக்கு பிரச்னைகள் ஏற்படாத வண்ணமே பெயர் கள் அறிவிக்கப்படவில்லை.

யூகோஸ்லாவியாவின் ஒலிம் பிக், மற்றும் தே சி ய விளை யட்டு அணிகளில் இ ந் த ஜூடோ வீரர்கள் இருந்தவர் கள் என்று கூறப்பட்டது.(கி)

## தீவுப்பகுதி தொலைதொடர்பு சேவை துண்டிப்பு!

### எதிர்க்கட்சித்தலைவர் எடுக்கும் நடவடிக்கை

(இ. கந்தசாமி)

ந யி னா தீ வு, அனலைதீவு, நெடுந்தீவு ஆகிய பகுதிகளிலி ருந்து யாழ்ப்பாண ந க ரு க் கான தொலைபேசி த ந் தி ச் சேவைத் தொடர்புகள் தற் போது தபால் அலுவலகங்க ளி ல் துண்டிக்கப்பட்டிருப்ப தால் இத்தீவுப் பகுதி மக்கள் பெரும் கஷ்டத்துக்குள்ளாகி யிருப்பதாக தமது கவனத்துக் குக் கொண்டு வரப்பட்டுள்ள தாக எதிர்க்கட்சித் தலைவர் திரு. அனுரா பண்டாரநா யகா தபால் தந்திச் சேவை கள் அமைச்சர் திரு. டி. பி. விஜயதுங்காவுக்கு க டி த ம் மூலம் எடுத்துக் கூறியுள்ளார்.

திரு. அனுரா தமது க டி தத்தில் மேலும் தெரிவித்துள் ளதாவது:

இவ்விதம் சேவை துண்டிக் கப்பட்டுள்ளதால் இந்த தீவுப் பகுதிகளிலுள்ள பொது மக் கள் தமது உறவினர்களுட னும் நண்பர்களுடனும் தாம் விரும்பியவர்களுடனும் சாதா ரண நேரங்களிலும் அவசிய மான நேரங்களிலும் தொட ர்பு கொள்ள முடியாத ஒரு இக்கட்டான நிலையில் தற் போதிருக்கின்றார்கள். இதனால் இவர்கள் தற்போது பெரும் கஷ்டத்தை அனுபவித்து வரு கின்றார்கள்.

இ வ் வி த துண்டிப்புக்குக் காரணம் எதுவாக இருந்தப லும் ம க் க ள் எங்கிருந்த போதிலும் அவர்கள் குறை ந்த அளவிலாவது தொடர்பு களை ஏற்படுத்திக் கொள்வ தற்கு அரசாங்கம் கடமைப் பட்டுள்ளது

இத்தொடர்புச் சேவைகளை தபாற் கந்தோர்கள் மூலமா கத் தொடர்ந்து நடத்துவதற் கான ஏற்ற நடவடிக்கையை இயன்றளவு விரைவாக செய் யுமாறு கேட்டுக் கொள்கின் றேன்

## புறூக்ளின் மருத்துவமனை: எம். ஜி. ஆரின் மூளைவீக்கம் குறைந்து வருகிறது!

### கர்நாடகமுதல்வர், ஐ. நா பிரதிநிதி பார்வையிட்டனர்

நியுயோர்க், நவ 9 தமிழக முதலமைச்சர் திரு எம். ஜி. ராமச்சந்திரன் நியு யோர்க்‘புறூக்ளின்’ மருத்துவ மனையில் தொடர்ந்து நல்ல உடல் நிலையில் இருந்து வருகி றார். அவரது மூளை வீக்கத்தில் பெரும் பகுதி குறைந்துள்ளது.

திரு எம். ஜி. ஆ ரை கர் நாடக முதலமைச்சர் திரு. ராமகிருஷ்ண ஹெக்டே ஐ. நாவுக்கான இந்தியப்பிரதிநிதி திரு. என். கிருஷ்ணன் ஆகி யோர் நேற்றுப் பார்வையிட் டனர்.

திரு.ராமகிருஷ்ண ஹெக்டே சுமார் 90 நிமிடங்கள் முதல் வரின் அறையில் இருந்தார். அவருக்கும், திரு கிருஷ்ணனுக் கும் அமைச்சர் ஹண்டே உடல்நிலை விபரங்களை விளக்கி னார். திரு எம் ஜி. ராமச்சந் திரனை பரிசோதிக்க பல முக் கிய நிபுணர்கள் எதிர்பார்க்கப் படுகின்றனர். (கி)

## இந்திரா பிறந்த ஆனந்த பவனுக்கு அஸ்திக்கலசம் செல்கிறது!

புதுடில்லி நவ, 9 மறைந்த இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியின் ‘அஸ்தி’க் க ல ச மொ ன் று அலகபாத் ந க ர த் து க் கு க் கொண்டு செல்லப்படுகின் றது. இக்கலசத்தை பிரத மர் திரு ரஜீவ் காந்தி விசேட விமானத்தில் எடுத்துச் செல் கிறார்

அலகபாத் நேரு குடும்பத் தின் பிறப்பிடமாகும். இங் குள்ள ‘ஆனந்தபவான்’ இல்லத் திலேயே திருமதி இந்திரா காந்தி பிறந்தார். இங்கேயே ‘பி ரி ய த ர் ஷி னி’, ‘இந்து’ என்ற செல்லப் பெயர்களுடன் அவர் குழந்தைப்பருவம் முதல் வளர்க்கப்பட்டார்.

அலகபாத்தில் உள்ள திரு மதி இந்திரா கா ந் தி யி ன் தொகுதியான ரேபரேலி, அவ ரது மறைந்த பு த ல் வ ன் சஞ்சே காந்தி, பிரதமர் ரஜீவ் க ந்தி ஆகியோரின் தொகுதி யான அமேதி ஆகியவற்றுக் கும் இந்த ‘அஸ்தி’க் கலசம் கொண்டு செல்லப்படும். (கி)

## இந்திராவுக்கு அஞ்சலி: வலி வடக்கில் நடந்த ஊர்வலம், கூட்டங்கள்!

(மாவிட்டபுரம்)

மறைந்த பாரதப் பிரதமர் திருமதி இந்திரா காந்திக்கு தெல்லிப்பழை, க ட் டு வ ன், ஏழாலை, குரும்பசிட்டி ஆகிய பகுதிகளிலுள்ள மக்கள் உண் ணாவிரதம் இருந்தும், நீண்ட ஊர்வலங்கள் நடத்தியும் அஞ் சலி செலுத்தினர். இப்பகுதி கள் எங்கும் திருமதி காந்தி யின் உருவப்படங்களும் கறுப் புக் கொடிகளும், மகரதோர ணங்களும் தொங்கவிடப்பட் டிருந்தன.

கட்டுவன் சந்தியில் ஆரம்ப மான ஊர்வலம் ஏழாலை, குப்பிளான் ஊரங்குனை ஊடா கச் சென்று குரும்பசிட்டியை அடைந்தது

அன்னை இந்திரா காந்தியின் பெரிய உருவப்படமும் இவ் வூர்வலத்தின் போது எடுத் துச் செல்லப்பட்டது.

குரும்பசிட்டி கிராம அபிவி ருத்திச் சங்க மண்டபத்தில் இரங்கல் கூட்டம் நடைபெற் றது.

முன்னாள்கிராமோதயசபைத் தலைவர்கள் திரு கிருஷ்ணமூர் த்தி, திரு. வ. ஸ்ரீதரன், கவிஞர் வை. நாகராசா உட்

(7ம் பக்கம் 2ம் கலம் பார்க்க)

Home Finance Ltd.

யாழ். நகர மக்களுக்கு ஹோம் பினான்ஸ் லிமிட் டட்டின் மற்றும் ஓர் புதிய சேவை.
நவீன முறையில உங்கள் இல்லங்களை அலங்கரிக்க அழகான, உறுதியான FIBRE GLASS வீட்டுத் தளபாடங்களையும்,

- சாப்பாட்டு மேசை கதிரைகள்,
- T. V. மேசை,
- தண்ணீர்த் தாங்கி,
- WASH BASIN,
- TEAPOYS, ★ CENTRE TABLE,
- VERANDAH CHAIRS

என்பவற்றை ஒருங்கே பெற்றுக்கொள்ள
இன்றே நாடுங்கள்,

TRADE CENTRE,
ஹோம் பினான்ஸ் லிமிட்.,
155, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

உங்கள் விலைமதிப்புள்ள டி. வி. வீடியோ,றேடியோ போன்ற எலெக் ரோனிக்ஸ், எலெக்றிக்கல் பொருட் கள் ப ழு தா கி விட்டதென்ற கவலையா?

உங்கள் குறைகளை நிவர்த்திசெய்ய இத்துறையில் தேர்ச்சிபெற்ற பொறியியலாளர்களைக் கொண்ட ‘ஸ்டார் எலெக்ரோனிக்ஸ்’ஐ நாடுங்கள்

ஸ்டார் எலெக்ரோனிக்ஸ்

இல: 37/6, 37/7 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

**மணிவாக்கு**

பச்சைப் பசுந்தமிழ் நாட்டினிலே — தமிழ்
பாய்ந்திட வாழ்வதே வாழ்வு.

— பாரதியார்

# நமது நோக்கு

## யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியின் பெருங்குறை

'தன்முற்றத்தில் உள்ள மல்லிகைமணக்காது' என்று நம்பும் மக்களில் முதல் நம்பர் யாழ்ப்பாணத்தவருக்கே உரியது.

பையன் படிக்கப் பாடசாலையென்றாலென்ன, மரக்கறி தொடக்கம் படுக்கும் மெத்தைவரைக்கும் பெரிய பட்டணத்திலேயே தேட வேண்டுமென்ற திடசங்கற்பம் கொண்டவர்கள் யாழ்ப்பாண மக்கள்.

திறம் சுருட்டு, . திறம் வெற்றிலை 'றலி' சைக்கிள், பி. எஸ். ஏ. மோட்டார் சைக்கிள் போன்ற பிரபல விலாசங்களைத் தப்பி வேறெங்கும் போகாதவர்கள் யாழ்ப்பாணப் பெருங்குடி மக்கள்.

கொழும்பென்றால் அது மண்வெட்டியானாலும் 'கார்கில்ஸ' 'குடிகோத்திரம் விலாசம்' என்பவைக்கு தனி மதிப்பளிக்கும் மரபு இன்னும் மாறவில்லை.

இந்தப் பின்னணியில் எந்த வருத்தமும் 'உயிருக்கு ஆபத்து' என்று எண்ணும் வருத்தமானால் யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியை விட்டால் இடமுண்டா? டாக்டர்கள் பற்றுக்குறை குறையுமென்று நம்பஇடமுண்டா?

இந்த மனோபாவம்மாறும் வரைக்கும் யாழ். ஆஸ்பத்திரி வைத்திய அத்தியட்சகர் விடுத்திருக்கும் அவசர வேண்டுகோள் வேலை செய்யுமா என்பது சந்தேகம்.

ஒரு நோயாளியைப் பார்வையிட 45 விநாடி மட்டுமே செலவிடமுடியுமாதலால், கடுமையான நோயாளிகூட பாதிக்கப்படும் அபாயம் உண்டு என்பது வைத்திய அத்தியட்சகரின்கருத்து 'கடுமையான நோயாளி என்பது நானல்ல; 15மைலுக்கப்பாலிருந்து பயணம் செய்யும் நான் பலஅலுவல்களில் ஒரு அலுவலாகவே போத்தலையும் கொண்டு வருகிறேன்' என்பது சாதாரண நோயாளியின் மனக்கருத்து.

இன்னொரு கூட்டத்தினர் தடிமன் என்றால் நியூமோனியா, தலைஇடி என்றால் மூளையில்புற்றுநோய், வயிற்றுளைவென்றால் பேதிநோய் என்று துரும்பைத் தூணாகக் கண்டு அஞ்சுபவர்கள்; கெட்டும் பட்டணம் என்ற பழமொழியில் அசையாத நம்பிக்கைகொண்டவர்கள்.

இவர்கள் யாவரும் கவனத்திற் கொள்ள வேண்டியது; யாழ். பெரிய ஆஸ்பத்திரியின் சிகிச்சை வசதிகளை பயன்படுத்தவேண்டுமானால், தங்களுக்கு அண்மையில் உள்ள ஆஸ்பத்திரியில் நோய்க்கு சிகிச்சை ஆரம்பிக்கவேண்டும்.

நோய் சிக்கலானதாகவிருந்தால் அந்த ஆஸ்பத்திரி டாக்டரின் துண்டே பெரியாஸ்பத்திரியின் மருத்துவ நிபுணரிடம் சிகிச்சை பெறுவதற்குபோதுமானது. இந்த ஒழுங்கை மிகவும் கண்டிப்பாக நிர்வாகம் கடைப்பிடித்தால் பலர் இதனைப் பின்பற்ற முயல்வார்.

பணவசதி படைத்தவர் தனியார் மருத்துவசாலைக்கு வைத்திய நிபுணர்களை அழைப்பார்கள். இது இந்த ஒழுங்குக்கு குந்தகமாவதை எவ்வாறு குறைக்கலாமென்பது வைத்திய நிபுணர்களின் தியாக உணர்வில் தங்கியுள்ளது.

## தெல்லிப்பழையின் நீங்காத தொல்லை

தென் இந்தியாவில் உள்ள வேலூரில் ஒரு மகத்தான மிஷன் மருத்துவமனை உண்டு; ஆனால் அங்கு பேசப்படும் அதிசயங்களில் அது இடம் பெறுவதில்லை.

நாடில்லா அரசனும், நீரில்லா ஆறும், தெய்வமில்லாக் கோயிலும் வேலூருக்குத் தனிச் 'சிறப்புக்' கொடுக்கும் அற்புதங்கள் என்று உல்லாசப் பயணிகள் பாடம் பண்ணுவார்கள்.

இன்று அங்கு சிறையில் வைக்கப்பட்ட கண்டியின் கடைசி அரசன் சிறிவிக்கிரமராஜசிங்கன் மறைந்துவிட்டதால் அந்த அற்புதம் அங்கில்லை.

நாமிதனைக் குறிப்பிடுவது தெய்வமில்லாப் பெருங்கோயிலை நினைவு கூரவே சிற்பக்கலைக்கு சிறந்த எடுத்துக்காட்டாக அமைந்த சிவன் கோயில் எந்த விக்கிரகமுமில்லாத நிலையில் காணப்படுகிறது. கடந்த காலப்போரின் விளைவு.

இங்கு யாழ்ப்பாணத்தில் உள்ள தெல்லிப்பழையில் டபகுதி மக்களுக்கு அவசியமான புற்றுநோய் வசிகிச்சை நிலையத்தை பல லட்ச ரூபாயில் நிறுவினோம். பலபெரியோர் கொடைவள்ளல்களின் உதவியால் இது நனவாயிற்று. இதுதெய்வமில்லாக்கோயில் என்ற அற்புதத்துக்கு அருகதையாயிற்று.

புற்றுநோய் மருத்துவ நிபுணர் இன்னும் கிடைக்கவில்லை. நோயாளிகளின் அபாய நிலையைக் கற்பனை செய்ய முடியாதவர் உண்டா? அரசாங்கம் உதவுமென்று மனப்பால் குடிக்கலாமா?

யாழ்ப்பாணத்துக்கு அவசியமானதென்ன? முன்னுரிமைப் பட்டியல் ஒன்று தயாரானால் நகர் இன்றைய கேவல நிலையில் இருக்குமா? நாட்டுக்கு அவசியமான வைத்திய நிபுணர்கள் யாழ்ப்பாணத் தமிழர்களாக வேற்று நாட்டில் பணியாற்றுகின்றனர். புற்றுநோய் நிபுணரையே காணலாம்.

பொறுப்புடைய, சமுதாய சேவைக்கென உழைக்கும் தொண்டர் குழாம் இந்தக் குறைகளைத் தீர்த்து வைக்க முடியும்.

### கிளிநொச்சியில்

# இந்திராவுக்கு நூற்றுக்கு

## மேலான அஞ்சலிக் கூட்டங்கள்!

(கிளிநொச்சி)

பாரதமாதா அன்னை இந்திராவின் மறைவைத் தொடர்ந்து இறுதிக் கிரியைகள் நடைபெற்ற சனிக்கிழமை மட்டும் கிளிநொச்சி மாவட்டத்தில் நூற்றுக்கு மேற்பட்ட அஞ்சலிக் கூட்டங்கள் நடைபெற்றன.

கிளிநொச்சி திருநகரில் மாதர் சங்கம்: கிராம முன்னேற்றச் சங்கம் மற்றும் சங்கங்கள் இணைந்த அஞ்சலிக் கூட்டமும், அம்பாள் குளத்தில் விவசாயிகள் சம்மேளனம், கிராம முன்னேற்றச் சங்கம் ஏற்பாடு செய்த அஞ்சலிக் கூட்டமும் நடைபெற்றன.

கனகபுரம் இளைஞர் கழகம் கனகபுரம் பகுதி பொதுமன்றங்களுடன் இணைந்து அஞ்சலிக் கூட்டமொன்றை நடத்தியது.

ஜெயந்திநகரில் நடைபெற்ற அஞ்சலிக் கூட்டத்திற்கான ஏற்பாடுகளை இப்பகுதி கிராம முன்னேற்றச் சங்கம் சேய்திருந்தது.

இக் கூட்டம் ஆரம்பமாவதற்கு முன்னர் கணேசபுரம் உருத்திரபுரம் ஆகிய பகுதிகளில் இருந்து மௌன ஊர்வலம் ஒன்று கூட்டமைதானத்தை வந்தடைந்தது. இவ் ஊர்வலத்தில் மூவாயிரம்பேர் கலந்து கொண்டனர்.

உதயநகர் நாகதம்பிரான் ஆலயத்தில் நடைபெற்ற அஞ்சலிக் கூட்டத்திற்கான ஏற்பாடுகளை உதய கலாமன்றம் செய்திருந்தது.

முருகண்டியில் பிள்ளையார் ஆலய நிர்வாகிகளும் வர்த்தகர்களும் இணைந்து ஊர்வலமும், அஞ்சலிக் கூட்டமும் நடத்தினார்கள்

பளையில் செல்வபுர கலைமகள் மண்டபத்தில் தமிழகமுதல்வர் சுகம்பெறவும், அன்னை இந்திராவின் ஆத்ம சாந்திபெறவும் பிரார்த்தனையும் உண்ணாவிரதமும் நடைபெற்றது.

கிளிநொச்சி நீர்ப்பாசனத் திணைக்கள தமிழ்ப்பண்பாட்டுக் கழகமும் அஞ்சலிக் கூட்டம் நடத்தியது.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் கிளிநொச்சி மாவட்ட பிரதிநிதி எஸ். சுப்பிரமணியம், கிளிநொச்சி பத்திரிகையாளர் வாசகர் நலன் புரிச் சங்க பொருளாளர் நாயகம் சிற்றம்பலம், செயலாளர் எஸ். திருக்கேதீஸ்பரன் ஆகியோரும் அஞ்சலிச் செய்திகளை வெளியிட்டுள்ளனர்.

## நெஞ்சத்தை தொட்ட காரைநகர் ஊர்வலம்

(காரைநகர்)

இந்தியாவின் தவப்புதல்வி திருமதி இந்திராகாந்தி மறைவுக்கு காரைநகர் மக்கள் காரைநகரை சுற்றிவர ஓர் நீண்ட ஊர்வலத்தை நடத்தினார்கள்.

பாலாவோடையில் இருந்து புறப்பட்ட ஊர்வலம் பலுகாடு துறைமுகம், நீலன் காடு வாரிவளவு வலந்தலை வழியாக சென்று கிழக்கு வீதியால் மீண்டும் பாலாவோடையை வந்தடைந்தது சுமார் மூன்று மணிநேரம் இடம்பெற்ற இவ் ஊர்வலத்தில் ட்ராக்டர்கள் உட்பட ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் கண்ணீர் விட்டனர்.

## தலையாளி ஆலயமடத்தின் கதவுகளை உடைத்து சோதனை

(கோண்டாவில்)

கவசவாகனங்களில் வந்த இராணுவத்தினரால் நேற்று முன்தினம் பிற்பகல் கோவில் மடம் ஒன்று பலத்த சோதனைக்கு உள்ளாக்கப் பட்டது. இதனைத் தொடர்ந்து அப்பகுதியில் உள்ள மக்கள் பதற்றம் அடைந்து காணப்பட்டனர். இச்சம்பவம் தலையாளியில் இடம்பெற்றது.

ஐந்து கவசவண்டிகளில் வந்த இராணுவ வீரர்கள் பலகாலம் பயன்படுத்தப் படாது இருந்த தலையாளி வைரவர் கோவில் ஆலய மடத்தின் கதவுகளை உடைத்து உட்புகுந்தனர். அங்கிருந்து எப்பொருட்களும் எடுத்துச் செல்லப் படவில்லை. ஆனால் பூட்டிய பழமை வாய்ந்த கதவை அவர்கள் உடைத்து திறக்கும் போது ஏற்பட்ட சத்தம்காரணமாக அப்பகுதி மக்கள் பலத்த பீதி அடைந்து காணப்பட்டார்கள்.

இதேசமயம் கொக்குவில் சந்தியிலும் இராணுவ வீரர்கள் சோதனையை மேற்கொண்டு இருந்தார்கள்.

## "இலங்கை தமிழர்களுக்கும் தாய்"

(சுழிபுரம்)

''அன்னை இந்திரா பாரத நாட்டின் எழுபதுகோடி மக்களுக்கு மட்டும் தாய் அல்ல அவர் இலங்கைவாழ் தமிழ் மக்களுக்கும் தாயாகவிருந்து எமது உயிரையும், உடமையும் பாதுகாத்த தெய்வமாகும்'' என்று சங்கானை ப.நோ.கூ. சங்க பொது முகாமையாளர் திரு. வி. துரைசிங்கம் அன்னை இந்திராவின் மறைவையொட்டி அனுதாபம் தெரிவிக்கும் முகமாக சங்கத் தொழிலாளர்களால் நடத்தப்பட்ட இரங்கல் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்' மின்தறியாலை மண்டபத்தில் சங்கத்தலைவர் திரு.வ. யோகானந்தசிவம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

## சித்தன்கேணியில் மகா கும்பாபிஷேகம்

(மானிப்பாய்)

ஸ்ரீமத் தக்ஷிணகைலாசமெனப் பெயருடையதும், அநேக தேவஸ்தலங்கள்அமையப்பெற்றதும், புராண இதிகாசங்களில் சிறப்பித்துக் கூறப் பெற்றதுமாகிய பெருமை வாய்ந்த இலங்காதீபத்தின் சிகரமென விளங்கும் யாழ்ப்பாணத்தில் மூர்த்தி தலம் சிறப்புற அமையப் பெற்ற சித்தன்கேணி தனுவோனப் பதியில் சிவகாமி அம்பாள் சமேத சிவசிதம்பரேஸ்வரப் பெருமான் கோயில் கொண்டு எழுந்தருளியயுள்ளார். இவ்வாலயத்திற்கு இராஜ கோபுரமும், பரிவாராலயங்களும் அழகுற புதுப்பிக்கப்பட்டுள்ளன. இம்மாதம் 14 ம் திகதி புனர்பூச நட்சத்திரத்தில் காலை 9 மணி 55 நிமிடத்தில் மஹா கும்பாவிஷேக விழா நடைபெறவுள்ளது.

## மன்னாரில் மாணவர்கள் நடத்திய பாடசாலை

(மன்னார்)

ஆசிரியர்கள் பாடசாலைக்கு வராததால் மாணவர்களே பாடசாலையை நடத்திய அதிசயம் ஒன்று மன்னார் மாவட்டத்திலுள்ள பாடசாலை ஒன்றில் இடம் பெற்றுள்ளது.

இவ் அதிசயம் மன்னார் வண்ணமோட்டை அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் கடந்த வியாழக்கிழமை இடம் பெற்றது.

அன்றைய தினம் தலைமை ஆசிரியர் மன்னாரில் பாதுகாப்பு தொடர்பாக நடைபெற்ற கூட்டம் ஒன்றில்கலந்து கொள்வதற்காக மன்னாருக்குச்சென்று விட்டார்.

மன்னாருக்குச் சென்ற தலைமை ஆசிரியர் மன்னாருக்குச் செல்லுமுன் அப்பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர் ஒருவரை அழைத்து அம்மாணவனிடம் ஏனைய ஆசிரியரிடம் திறப்பைக் கொடுத்து பாடசாலையை நடத்துமாறு கூறும்படிசொல்லிவிட்டுபாடசாலைத் திறப்பையும் மாணவனிடம் கொடுத்து விட்டுச் சென்றார்.

அதேதினம் ஏனைய ஆசிரியர்களும் பாடசாலைவராது விடுமுறையில் இருந்தனர்.

நீண்ட நேரமாகியும் ஆசிரியர்கள் பாடசாலைக்கு வராததால் திறப்பை வைத்திருந்த மாணவன் பாடசாலையைத் திறந்து பாடசாலைக்கு வந்த மாணவர்களிடம் படிக்க விரும்புவோர் புத்தகத்தை எடுத்துப்படியுங்கள் அல்லது வாங்குகளில் படுத்துறங்குங்கள்என்று கூறினான்.

இதனைக் கேட்ட ஏனைய மாணவர்களில் பலர் படுத்துறங்கினர்.

இச்சம்பவம் பற்றி இப்பாடசாலையில் கல்விகற்கும் மாணவர்களின் பெற்றோர் மிகவும் கவலையடைந்துள்ளனர்.

## இ. போ. ச. பஸ் தீயிலிருந்து தப்பியது

(கோண்டாவில்)

நேற்று முன்தினம் நண்பகல் எரிந்துபோக இருந்த வட பிராந்திய போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ் வண்டி ஊழியர்களினதும் அயல் இளைஞர்களினதும் முயற்சியால் தடுத்து நிறுத்தப்பட்டது.

808 வழிப்பாதையில் செல்லும் பஸ் வண்டி கண்டிவீதி மின்சார சபைக்கு முன்வரும் பொழுது தீப்பற்றி புகைக்கத் தொடங்கியது. இதைத் தொடர்ந்து சாரதி பஸ்ஸை நிறுத்தியதும் அவருடன் இளைஞர்களும் சேர்ந்து தீயை அணைத்தனர். இவ் விபத்துக்குக் காரணம்வயரில் இருந்த மின் ஒழுக்கெனத் தெரியவருகின்றது.

### லயன்ஸ் கழகம் நடத்தும்

# பருத்தித்துறையில் நாளை நீரிழிவு கருத்தரங்கு

(புலோலி நிருபர் ஏ. என். எஸ். திருச்செல்வம்)

பருத்தித்துறை லயன்ஸ் கழகம் நடத்தும் நீரிழிவு சலரோகம் பற்றிய கருத்தரங்கு வட இந்து மகளிர் கல்லூரியில் 11-ம் திகதி ஞாயிறு நடக்கவுள்ளது. பருத்தித்துறை லயன்ஸ் கழகத் தலைவர் டாக்டர் எம். கே. முருகானந்தன் தலைமையில் நடைபெறும். பொது வைத்திய நிபுணர் ஆர். எஸ். ஜேம்ஸ், சத்திர சிகிச்சை வைத்திய நிபுணர் டாக்டர் வி. ஜெயப்பிரகாசன், சிறுகுழந்தைகள் வைத்திய நிபுணர் லயன் டாக்டர் எஸ். பத்மநாதன், லயன் டாக்டர் எஸ். பாலகிருஷ்ணன், பருத்தித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி கே. மயிலேறும் பெருமாள் லயன் டாக்டர் எஸ். நாகநாதன் ஆகியோர் கருத்துரை வழங்குவர்.

இதற்கான நடவடிக்கைகளை பருத்தித்துறை லயன்ஸ் கழகச் செயலாளர் லயன் பி. சிவயோகசுந்தரம் மேற்கொண்டுள்ளார்.

## இன்று நடக்கும் ஆண்டுக் கூட்டம்

(புலோலி)

யாழ். மறைமாவட்ட கத்தோலிக்க ஆசிரியர் சங்கத்தின் ஐந்தாவது ஆண்டு நிறைவுப் பொதுக் கூட்டம் இன்று சனிக்கிழமை யாழ். மறைக் கல்விப் புதிய மண்டபத்தில் சங்கத் தலைவர் திரு. ஆர். ஜோசெப் தலைமையில் நடைபெறும். பிரதம அதிதியாக யாழ். ஆயர் பேரருட் திரு. கலாநிதி தியோகுப்பிள்ளை கலந்து கொள்வார்.

### வடமாகாண வைத்திய

## மூலிகைகள் பாதுகாப்பு சங்கம் உதயம்

(யாழ்ப்பாணம்)

''வட மாகாணத்தில் புதிது புதிதாக தோட்டப் பயிர்கள் செய்கை பண்ணப்படுவதாகவும் வீடுகள் போன்றவை அமைக்கப்படுவதாலும், இயற்கையாக உற்பத்தியாகும் பல மூலிகைகள் அருகிவருகின்றன. இதனால் இக்காலத்தில் வாழ்பவர்களும், வருங்காலச் சந்ததியினரும் மூலிகைகளைப் பற்றி அறிய முடியாத நிலை தோன்றியுள்ளது. இவ்வாறு வடமாகாணவைத்திய மூலிகைகள் பாதுகாப்புச் சங்கத் தலைவர் டாக்டர் . தவராசா, மேற்படி சங்கத்தின் அங்குரார்ப்பணக் கூட்டத்துக்குத் தலைமைவகித்துப் பேசுகையில் கவலை தெரிவித்தார்.

தெல்லிப்பளை கட்டுவன் என்னுமிடத்தில் இச் சங்கத்தின் அங்குரார்ப்பணக் கூட்டம் நடைபெற்றது

திரு. தவராசா மேலும் பேசுகையில், கட்டுவனில் இருக்கும் ஓய்வு பெற்ற கல்லூரி அதிபர் திரு பொ .கனகரத்தினம் தமது வீட்டு வளவில் பலஉபயோகமூலிகைகளை உண்டாக்கியிருக்கிறார் என்றும் இம் மூலிகைகள் சித்த ஆயுர்வேத வைத்திய மாணவர்களுக்கும், பொதுமக்களுக்கும் பெரிதும் உதவியாயிருக்கிறதென்றும் சொன்னார்.

திரு . பொ . கனகரத்தினம் பேசுகையில்: இச் சங்கத்தின் நோக்கத்தினையும் அரசாங்கம் இப்படியான சங்கங்களை ஆக்கி மூலிகைகளைப்பாதுகாக்க முன் வந்திருப்பதையும் விரிவாக எடுத்துக் கூறினார்.

யாழ். அபிவிருத்திச் சபை மயிலிட்டிக் கிளை இலவச சுதேச வைத்தியசாலை பொறுப்பு வைத்திய அதிகாரி கே . பாலசுப்பிரமணிம் பேசுகையில் சித்த வைத்தியத்தின் தொன்மையையும் அதனைப் பாதுகாக்க வேண்டிய அவசியத்தையும் மூலிகைகள் சுதேச வைத்தியத்தில் பெரிதும் இடம் பெற்றிருப்பதையும் கூறியதுடன் தம்மாலான உதவிகளனைத்தையும் முன்னின்று செய்வதாகவும் சொன்னார். (மா)

### கோப்பாய் வைத்திய அதிகாரியின்

# முன்மாதிரியான பணி

[மானிப்பாய்]

தெய்வீகப் பணியான வைத்தியப்பணி எல்லோருக்கும் கிடைப்பதில்லை. அப்பணிக்கு உதாரண புருஷராக விளங்கித் தன்னலமற்ற கடமையுணர்வுடன் பணியாற்றி மக்கள்மனதில் நீங்காத இடத்தைப் பெற்ற டாக்டர் எஸ், இராஜேந்திரனின் வைத்தியசேவை பாராட்டுக்குரியதாகும். கோப்பாய் அரசினர் ஆஸ்பத்திரியில் வரலாற்றில் பொன் எழுத்தில் பொறிக்கத்தக்கஇவரது வைத்தியப் பணியும் மற்றும் சேவைகளும் ஏனைய வைத்திய அதிகாரிகளுக்கும் ஒரு முன்மாதிரியாகும்.

இவ்வாறு கோப்பாய் அரசினர் ஆஸ்பத்திரியில் 4 வருடகாலமாக வைத்திய அதிகாரியாகக் கடமையாற்றி, சகல மக்களின் அன்பையும் ஆதரவையும் பெற்றுள்ள ''வைத்திய கலாநிதி'' திரு எஸ். இராசேந்திரன் சேவையிலிருந்து ஓய்வு பெற்றுள்ளதை முன்னிட்டு, கோப்பாய் தெற்கு, கோப்பாய் வடக்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் சார்பாக நடாத்தப்பட்ட சேவைகள் பாராட்டு விழாவுக்கு தலைமை வகித்துப் பேசிய கோப்பாய் தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவரும், முன்னாள் கிராமோதைய சபைத் தலைவரும், இளைப்பாறிய மதுவரித் திணைக்கள பதில் அத்தியட்சகருமாகிய திரு கே. கனகலிங்கம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற இவ் விழாவுக்கு பெண்கள் உட்பட அதிகமான மக்களும் சமூகமளித்திருந்தனர்.

பிரதம சிறப்புரையாளர்களில் ஒருவரான கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் திரு. கே. கிட்டினர் விழாவில் கலந்துகொள்ளமுடியாத நிலைமையை முன்னிட்டு விழா அமைப்பாளரில் ஒருவரான ஆசிரியரான திரு இரா தம்பித்துரை வாழ்த்துச் செய்தி அனுப்பியுள்ளார்.

கோப்பாய் ஆஸ்பத்திரி டாக்டர் திருமதி கோபாலரத்தினம், இளைப்பாறிய வித்தியாதிபதி திரு ஏ. வி. மயில்வாகனம், கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி அதிபர் திரு. கே. இராசரத்தினம், ஓய்வுபெற்ற யாழ். மாவட்ட உதவி உணவுக் கட்டுப்பாட்டதிகாரி திரு. ஜே. எஸ். எஸ். ஆனந்தம், வணக்கத்துக்குரிய ஜே. என். ஜெயச்சந்திரன் அடிகளார், இளைப்பாறியஅதிபர் திரு எஸ். சுப்பிரமணியம், கோப்பாய் வடக்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவி திருமதி மகேஸ்வரி, கோப்பாய் கிறிஸ்தவக கல்லூரி ஆசிரியை திருமதி கிறேஸ்- சற்குணசிங்கம், இளைப்பாறிய கிராம அபிவிருத்தி அத்தியட்சகர் திரு கே. எஸ். முத்துவேற்பிள்ளை, உட்பட இன்னும்பலர் சிறப்புரையாற்றினர்கள். கோப்பாய் வடக்கு தெற்கு ஆகிய பகுதிகளிலுள்ளவர்களின் அன்பளிப்பாக 'ஸ்டெஸ்கோப்' கருவி கோப்பாய் வடக்கு கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் திரு சுப்பிரமணியம் டாக்டர் திரு. இராசேந்திரனுக்கு அன்பளிப்பாக வழங்கினர்.

டாக்டர் எஸ். இராசேந்திரன் பதிலுரை நிகழ்த்தினர் இறுதியாக விழா அமைப்பாளரில் ஒருவரான கோப்பாய் வடக்கு கிராம அபிவிருத்திச் சங்க செயலாளர் திரு செ செல்வரத்தினம் நன்றியுரை வழங்கினர்.




யுனிக் கொமுயுனிக்கேசன் சேர்விஸ்

UNIQUE COMMUNICATION SERVICE

நொடிப்பொழுதில் தெளிவான சர்வதேச தொலைபேசி ரெலெக்ஸ் அழைப்புகளுக்கு இன்றே நாடுங்கள் - யுனிக்

24 மணிநேர சேவை

யாழ் நகர அலுவலகம்
28'18 - 1.1 மகாத்மா காந்தி றேட்,
(சலுசலவுக்கு அண்மையில்)
யாழ்ப்பாணம்.
ரெலெக்ஸ் - 22285 PERIMR CE
தொலைபேசி 22789 22891

கொழும்பு நகர அலுவலகம்
அவுஸ்திரேலியா கட்டிடம்
த.பெ.1917, 54 யோர்க் வீதி, கொழும்பு :
ரெலெக்ஸ்.- 21652, 21742 21918 21931, PERIMP CE
தொலைபேசி:- 22726 547884, 548626, 549065, 549066


## பலியான...

(1ம்பக்கம்2ம்கலத்தொடர்ச்சி)

பத்திரி வீதிவழியாக வந்த இரு கவச வண்டிகள் யாழ். கஸ்தூரியார் வீதிக்குத் திரும்பி நகர்ந்தன. சற்றுப் பின் தொடர்ந்து இரு மினி பஸ்கள் சென்று கொண்டிருந்தன.

என்றுமிராத அளவுக்குப் பொதுமக்கள் நடமாட்டம் இருந்தது.

சகல கடைகளும், வர்த்தக ஸ்தாபனங்களும் முழு அளவில் திறக்கப்பட்டிருந்தன.

யாழ். நகரிலுள்ள சகல வீதிகளிலும் வாகனங்கள் நகர்ந்து கொண்டிருந்தன.

இந்த நேரத்தில் கஸ்தூரியார் வீதி - மின் சார நிலைய வீதிச் சந்திக்கிடையில் திடீரென இரு குண்டுகள் வெடித்தன.

அதனைத்தொடர்ந்து சரமாரியாகத் துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்ட தால் பொது மக்கள் பீதியடைந்து புகலிடம் தேடி ஆலாய்ப் 'பறக்க'த் தொடங்கினர்!

அகப்பட்ட வாகனங்களில் மக்கள் ஏறத்தொடங்கினர்.

பலர் பூட்டப்படும் கடைகளுக்குள் தஞ்சம் புகுந்தனர்.

நகரைவிட்டு சகல வாகனங்களும் விரைந்தன, வ. பி. போ.வ சபை பஸ்களும் புறப்பட்டன. மினிபஸ்களும் அப்படியே.

காலணிகளை விட்டு ஓடியவர்கள் ஒருபுறம்; துகிலுரிந்தபடி ஓடியபெண்கள் ஒருபுறம், வயோதிபர்கள், சிறுவர்கள் மாணவர்கள் பட்ட அவலம் சொல்லுந்தரமன்று! இருகால்களும் ஊனமுற்று முச்சக்கர வண்டிகளில் சுவீப்டிக்கட் விற்பனை செய்து கொண்டிருந்த இருவர்படுகாயமுற்றுள்ளனர்.

## உண்மையை-

(1ம்பக்கம் 3ம்கலத்தொடர்ச்சி)

களில்லைய!'' எனறு தெரிவித்துள்ளார்

மட்டக்களப்பு பிரஜைகள் குழுவின் அழைப்பை எற்று அமைச்சர் லலித்அத்துலத்முதலி நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மட்டக்களப்புக்கு விஜயம்செய்தார்.

மட்டக்களப்பு பிரஜைகள் குழு தலைவர் சட்டத்தரணி ஜே.டேவிட் தலைமையில் செயலாளர் பிரின்ஸ்காசிநாதர், மட்டக்களப்பு ஆயர் கிங்ஸ்லி சுவாமிநாதர், மட்டக்களப்பு இராமகிருஷ்ண முதல்வர் ஜீவானந்தஜீ, வர்த்தகர் எல். டபிள்யூ. சிறிபாலா உட்பட இந்து, பௌத்த, முஸ்லிம் பிரமுகர்கள் அமைச்சரைச் சந்தித்தனர்.

செயலாளர் பிரின்ஸ் காசிநாகர் நிலைமையை அமைச்சருக்கு விளக்கினர்.

கைதுசெய்யபபடுபவர்கள் ஒருவருடத்தின்பின்னர் நிரபராதிகள் என்று விடுவிக்கப்படுகிறார்கள். கைதுசெய்யப்படுபவர்கள் குறித்து இங்குள்ள சி ஐ டி. அறிக்கை கொழும்பு சி. ஐ. டி க்குச் சென்று அது சட்டமாஅதிபருக்குச் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் பாதுகாப்பு அமைச்சிடம் அது ஒப்படைக்கப்பட்ட, பின்னரே விடுதலை செய்யப்படுகிறார்கள். இந்நிலைமை மாற்றப்பட்டு, காலதாமதமின்றி விசாரணைகள் நடந்து முடிவுஎடுக்கப்பட வேண்டும்.

கைதான இளைஞர் ஒருவரின் தந்தையை அதிகாரிகள் அழைக்திருந்தனர். சித்திரவதையின்போது உடைந்த தன் மகனின் பல்லை என்னிடம் காட்டினர். தான் அங்கு சென்றபோது தனது கண்ணாடி கீழே விழுந்துவிட்டதென்றும், அந்தக் கண்ணாடியைத் தான் எடுக்கச்சென்ற போது, அதனை ஒரு பொலிஸ் அதிகாரி காலால் நொருக்கி, உனக்கென்ன கண்ணாடி என்று கேட்டதாகவும் சொன்னார்''

இவற்றைக்கேட்ட அமைச்சர் இதுகுறித்து நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்தார்.

## நிபந்தனையின்றி..

[1ம்பக்க 3ம்கலத் தொடர்ச்சி]

செய்யப்பட்ட டாக்டர் பிரேமச்சந்திரன், தாதி அம்பிகா கமலநாதன் ஆகிய இருவரும் எவ்வித நிபந்தனையுமின்றி விடுதலை செய்யப்பட்டனர்.

## யாருடையது?

பருத்தித்துறை பூதராயர் கோயில் ஒழுங்கையைச் சேர்ந்த திரு . இராசேந்திரம் நடராசாவின் மயிலிட்டி கேசரி ஒழுங்கையைச் சேர்ந்த திரு சின்னப்பு குணரத்தினம் தம்பசிட்டியைச் சேர்ந்த திரு . தாமோதிரம் பிள்ளை உதயசங்கர்ஆகியோரின்அடையாள அட்டைகளை திரு .எஸ் சிவ சபேசனும், பணத்துடன் கூடிய ஒரு பேர்ஸினை நவாலி வடக்கைச் சேர்ந்த திரு .பேரின்பநாதனும் பணத்துடன் கூடிய வேறு ஒரு பேர்ஸினை ஓட்டுமடத்தைச் சேர்ந்த திரு .என். சண்முகமும் கண்டு எடுத்து ஈழநாடு அலுவலகத்தில் ஒப்படைத்துள்ளார்கள் உரியவர்கள் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளவும்.

## சுறுசுறுப்பாக...

(1ம்பக்க 5ம் கலத் தொடர்ச்சி)

பாக ஈடுபட்டுக்கொண்டிருந்தனர்.

### இரத்தம் தேவை

காயமடைந்தவர்கள் சற்று நேரம்தாமதித்தே யாழ். ஆஸ்பத்திரிக்குக் கொண்டுசெல்ல வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டதால், அவர்களிலிருந்து அதிக இரத்தம் வெளியேறிவிட்டதாக வைத்திய அதிகாரிகள் கவலை தெரிவித்திருந்தனர்.

படுகாயமடைந்தவர்களின் உயிரைக்காப்பாற்ற இரத்த தானம் வழங்கும்படி, ஆஸ்பத்திரியில் குழுமிநின்றவர்களை வைத்தியஅதிகாரி வைத்தியகலாநிதி நச்சினார்கினியன் வேண்டுகோள்விடுத்தார்.

சிற்றூழியர்கள் காயமுற்றோரை வார்டுகளுக்கு எடுத்துச் செல்வதிலும், தொடர்ந்துதாதிகள்- டாக்டர்கள்- சந்திரசிகிச்சை நிபுணர்கள் சிகிச்சை அளிப்பதிலும் மும்முரமாகஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. [மா]

## வவனியாவில்...

(1ம்பக்கம்3ம்கலத்தொடர்ச்சி)

டுள்ளனர்.

நேற்று நண்பகல் வவனியா நகரத்தைச் சுற்றி வளைத்த இராணுவத்தினர் கடை உரிமையாளர்களைத் தவிர மற்றும் யாவரையும் பொலிஸ் நிலையத்துக்கு வருமாறு ஒலிபெருக்கி மூலம் அறிவித்தனர்.

இதனைத் தொடர்ந்து சுமார் 500 பேர் பொலிஸ் நிலையத்துக்குச் சென்றனர். இவர்களில் அடையாள அட்டை வைத்திருந்த சுமார் 400 பேர் ஒரு புறமாகவும், அடையாள அட்டைவைத்திருக்காத சுமார் 100 பேர் வேறொருபுறமாகவும் நிறுத்தப்பட்டனர்

விசாரணையின் பின்னர் அடையாள அட்டை வைத்திருந்த 400பேரும் விடுதலை செய்யப்பட்டனர். மற்றும் 100பேரும் விசாரணைக்காக தடுத்துவைக்கப்பட்டுள்ளனர். [க]


JASE INSTITUTES
(Trimmer Hall Classes)

டில்கா மேல்மாடி (யாழ். பஸ் நிலையம் முன்பாக)

★ 1984 / 85 ஆண்டுக்கான வெளிவாரிப் பல்கலைக்கழக G. A. Q. வகுப்புக்கள்
★ 1984 / 85 ஆண்டுக்கான G. A. Q. மீட்டல் வகுப்புக்கள்
★ G. A. Q. பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கான B. A. வகுப்புக்கள்

ஆரம்பம்: 1-11-1984

| பாடங்கள் | | ஆசிரியர்கள் |
|---|---|---|
| பொருளியல் | — | ஜோர்ஜ் |
| தமிழ் | — | ''சொக்கன்'' |
| புவியியல் | — | றேபேட் |
| இந்துநாகரிகம் | — | கிருஷ்ணவேணி |
| மெய்யியல் | — | பிரபல ஆசிரியர் |
| அரசியல் | — | பிரபல ஆசிரியர் |

கடந்த பல வருடங்களாக அதிக பெறுபேறுகளை அளித்த ''ரிம்மர் மண்டப வகுப்புக்கள்'' டில்கா மேல்மாடிக்கு (பஸ் நிலையம் முன்பாக) மாற்றப்பட்டுள்ளதை அறியத்தருகிறோம்.

### சில்லாலையில்

# அப்பியாசக் கொப்பிகள் தயாரிக்க நடவடிக்கை

(பண்டத்தரிப்பு)

சில்லாலை கிராமமுன்னேற்ற சங்கம் பாடசாலை மாணவர்களுக்கான அப்பியாசக் கொப்பிகளை தயாரிக்கும் சிறுகைத் தொழில் ஒன்றை ஆரம்பிக்கவுள்ளது. இத் திட்டத்தின் மூலம் இங்குள்ள சிலருக்கு வேலைவாய்ப்புக் கிடைக்கவுள்ளது

சில்லாலை கிராம முன்னேற்றச்சங்கக் கூட்டத்தில், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு தேவதாஸ் பங்குபற்றினார்.

அப்பியாசக் கொப்பிகளைத் தயாரிக்கும் சிறுகைத் தொழிலுக்கு உதவி அளிக்கும் படி கூட்டத்தில் கேட்டுக் கொண்டதைத் தொடர்ந்து இத் தொழில் சம்பந்தமான அறிக்கையொன்று சமர்ப்பிக்கும் பட்சத்தில் ஐந்து முதல் 10ஆயிரம் வரை உதவித்தொகை அளிக்கப்படு மென்று தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சிறுகைத் தொழில் விரைவில் ஆரம்பிக்கப் படுமென்று சங்கக்காரியதரிசி டாக்டர் சுகந்தன் இன்னுசித்தம்பி தெரிவித்தார்.

### பண்டத்தரிப்பில் நடந்த

# முதல் உதவிப்பரீட்சையில் தோற்றியவர்களுக்கு பத்திரம்

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரியில் 36 ஸ்தாபனங்கள் கலந்து கொண்ட முதல் உதவி செய்முறைப் பரீட்சையில் தோற்றியவர்களுக்கு ஓம் மாதம் 17ம் திகதி சுன்னுகம் இராமநாதன் கல்லூரியில் நடக்கும் அணிவகுப்பு விழாவில் பத்திரங்கள் வழங்கப்படவுள்ளன.

2 பாடசாலைகளும், 10கிராம அபிவிருத்தி ஸ்தாபனங்களும் பங்குபற்றின.

வட்டுக் கோட்டை, மானிப்பாய், காங்கேசன்துறை ஆகிய தொகுதிகளைச் சேர்ந்த பாடசாலைகளும், ஸ்தாபனங்களும் இந்த செயல்முறைப் பரீட்சையில் தோன்றின. சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் படை யாழ் மாவட்ட ஆணையாளர் டாக்டர் சுகந்தன் இன்னுசித்தம்பியின் பணிப்பின் பேரில் பிரிவு அத்தியட்சகர் திரு.என் போஷின் இந்தப் பரீட்சைக்கான ஏற்பாடுகளைச் செய்தார்.

போட்டி மஸ்தியஸ்த்தர்களாக வைத்திய கலாநிதி ரி. விக்னேஸ்வரன், திருமதி. ஜீவித்தா இன்னுசித்தம்பி ஆகியோர் பங்குபற்றினர்.

## இன்று

(கிளிநொச்சி)

கிளிநொச்சி திருநெறிக்கழக புனரமைப்புக் கூட்டமும் திருமுறைவிழா ஆலோசனைக் கூட்டமும் இன்று மாலை கிளிநொச்சி கனிஷ்ட மக வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

## வவனியா வந்த உலக வங்கி திட்டக்குழு

(வவனியா)

உலகவங்கி திட்ட நிபுணத்துவகுழு ஒன்று கடந்த 7ம் திகதி வவனியா வந்தது ஒருங்கிணைந்த கிராமிய அபிவிருத்தி வவனியா பகுதி திட்டவேலை மதிப்பிடும் நோக்குடனேயே இக் குழு இங்குவந்ததாக தெரிகின்றது.

கலாநிதி வியூறிக், கலாநிதி எஸ்.குணசிங்கம், திருவை கே. மூர்த்தி ஆகியோர் இக் குழுவில் வந்திருந்தனர்.

## ரூபவாஹினி

மாலை

5-30 நியூஸ்பைடர்மேன்
5-55 சிறுவர் நிகழ்ச்சி [சிங்களம்]
6-25 தொன்மைக்கால ஆராய்ச்சி [ஆங்கிலம்]
6-55 செய்திகள் [தமிழ்]
7-15 பக் ரொஜர்ஸ் சதித் திட்டமொன்று பற்றிய சித்திரம் [ஆங்கிலம்]
8-15 செய்திகள் [சிங்களம்]
8-35 பாடல்கள் [சிங்களம்]
9-05 இசை (சிங்களம்]
9-30 செய்திகள் [ஆங்கிலம்]
10-00 ஸ்டாஸ்கி அன்ட் ஹச்
10-30 உலகச் செய்திகள்
10-35 ஸ்டாஸ்கி அன்ட் ஹச் [தொடர்ச்சி]
10-55 நிகழ்ச்சிகள் முடிவு

## அமைதிகாக்கும் தேவதை

கருவினி லிருந்த போதே
கற்றனை ஆட்சி வித்தை!
பெரும்பணி ஆற்றி வாழ்வில்
வேபெற் றேகற் பகமாம்
தருவினை யொத்தே யாங்கு
சஞ்சலம் தீர்த்த தாயே!
ஒரு நொடிதன்னி லெல்லாம்
ஓய்ந்ததே மறைந்த தம்மா!
அருமருந் தன்ன தாயே
ஆயனும் வழியும் நீயே
செருகளத் தலைவன் நீயே
தீபமும் ஒளியும் நீயே
தருமமும் தருக்கும் நீயே
தானமும் யாவும் நீயே
ஒரு நொடி தன்னிலெல்லாம்
ஓய்ந்ததே மறைந்த தம்மா!
பரந்துயர் இமயம் போலும்
பாரத நாடே போலும்
விரிந்து நீள் கங்கை போலும்
விண்ணொளிர் கதிரோன் போலும்
திருவரு ளமைதி காக்கும்
தேவதை போலும் நின்ருய்
ஒரு நொடி தன்னிலெல்லாம்
ஓய்ந்ததே மறைந்த தம்மா!

ம. ஜீவரத்தினம்

## அகல்விளக்கு அணைந்ததோ!

இந்துமா ஆழ்கடல் கொந்தளித் தழுதிட
இணையிலா அமைதி கொன்ருன்
சிந்தைநொந் திதியம் செந்த்திட நீதியைச்
சிதைத்துயிர் பறித்து விட்டான்
வெந்தபுண் ஆனதோ வையகம் இந்திரா;
வெண்புரு அகன்று போச்சோ!
அந்திவான் கோலமாய் அழகொளிர் அன்னையுன்
ஆவியும் கடந்து போச்சோ!
உன்னையோ கொன்றனன் உணர்விலான் மக்களின்
உரிமைவாழ் அன்பு கொன்ருன்
தன்னையே கொன்றனன் தாய்மையைக் கொன்றனன்
தரணியாள் பெண்மை கொன்ருன்
இன்னலோ நீண்டதெம் இருவிழி தோய்ந்தது
இருட்டிலெம் பயணம் ஆச்சோ!
அன்னையோ வீழ்ந்தனள் அகிலமே வீழ்ந்தது
அகல்விளக் கணைந்து போச்சோ!

செ. மகேந்திரன்


# பற்றீஷியன்இன்ஸ்ரிரியூட்ஸ்

கீழ் குறிப்பிட்டவைக்கு
செய்முறை நெறிமுறை உட்பட்ட
எமது அடுத்த வகுப்புகள் எதிர்வரும்
வியாழக்கிழமை 15-11-1984-ல்
ஆரம்பமாகும்

★ மோட்டார் மெக்கானிஸம் (MOTOR MECHANISM)
★ எலக்ரிக்கல் என்ஜினியரிங் வேர்க்ஸ் டிப்புளோமா (ELECTRICAL ENGINEERING WORKS DIPLOMA)
★ படம்வரைதல் பில்டர்ஸ் குவாண்ரிரிஸ் உட்பட (DRAFTSMANSHIP — INCLUSIVE OF BUILDERS QUANTITIES)
★ எலெக்ரோனிக்ஸ் (ELECTRONICS)

6 மாதகால பகுதி நேர வகுப்பு

★ கடைச்சல் இயந்திர இயக்குதல் (LATHE OPERATION)
★ மின் வெல்டிங் (ARC WELDING)
★ றெப்றிஜறேஷன் (REFRIGERATION)
★ தொழிற்சாலைகள் மின்இணைப்பு (FACTORY WIRING)

3 மாத கால பகுதி நேர வகுப்பு

★ வீட்டு மின் இணைப்பு (HOUSE WIRING)
★ நீர் குழாய் இணைப்பு (PLUMBING)

1 மாதகால பகுதி வகுப்பு

இவ் நிறுவனத்தில் விற்கப்படும் விண்ணப்பப் பத்திரத்தில் மட்டும் திங்கள் 12-11-1984 பி.ப. 4-00 மணிக்கு முன் விண்ணப்பிக்கவும்.

விண்ணப்பப் பத்திரமும் மற்றும் விபரங்களும் இக் கந்தோரில் நேரில் வந்து மு. ப. 9-30 மணி தொடக்கம் பி. ப, 4-00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்

ஒவ்வொரு வகுப்பிலும் 15 பேர் மாத்திரம் விண்ணப்பிக்கும் கிரமப்படி சேர்க்கப்படுவர். ஆகவே உடன் விண்ணப்பித்து ஏமாற்றத்தைத் தடுக்கவும்.

பதிவாளர்,
பற்றீசியன் இன்ஸ்ரிரியூட்ஸ்
59, சென். பற்றிக்ஸ் வீதி, யாழ்ப்பாணம்.



# விவசாயிகளே!

BAYER

உங்கள் நெல் வயலில் உண்டாகும் கோழிச்சூடான், நெற்சப்பி. மொண்டி, குதிரைவால்புல், ஆடிப்புல், பன்கோரைவகை எல்லாக் களைகளையும் அழிக்க பாவியுங்கள்

"பாயர்" உற்பத்தியான

3. 4. டி. பி. ஏ. அடங்கிய "சேர்கோப்பூர்"

450 மி. லீ. — 57 ரூபா. 3 25 லீற்றர் — 375 ரூபா மாத்திரமே.

## நெல் விதைத்து 7 — 21 நாட்களுக்கிடையில்

நெல் விதைத்து 21 நாட்களுக்கு பின்னர் உண்டாகும் சிறுகோரை, சந்தனக்கோரை, முள்ளி கிடைச்சி ஆகிய எல்லா அகன்ற இலைகளையும் அழிக்க பாவியுங்கள்

எம். சி. பி. ஏ. அடங்கிய பாயரின்

(1) "ஹெடோனல் எம். 60%"
450 மி. லீ. — 60/- ரூபா. 2 லீற்றர் — 245/- ரூபா.
(2) 'ஹெடோனல் எம். 40%"
450 மி லீ. — 38/- ரூபா
(3) "ஹெடோனல் D. 55%"
450 மி லீ. — ரூபா 57-50

# ஹெகெம் லிமிட்டெட்

400, டீன்ஸ் வீதி, கொழும்பு – 10.

உங்கள் ஏக விநியோகஸ்தர்கள்:

யூனியன் ஏஜன்சீஸ், 50A, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
பாயர் அக்ரோ கெமிக்கல்ஸ். 4, அந்தோனிப்பிள்ளை கட்டடம், கிளிநொச்சி.
குளோப் ரேடர்ஸ், பசார் வீதி, வவனியா.
கே. அக்பார், மன்னார்.

**ராணி** (யாழ்ப்பாணம்)
சிவாஜியின்
**நிச்சயதாம்பூலம்**
தினசரி 3 காட்சிகள்

**ஸ்ரீதர்** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-00
கமலஹாசன், ஸ்ரீதேவி,
**தாயில்லாமல் நானில்லை**
(ஈஸ்ட்மன் கலர்)

**சாந்தி** (யாழ்நகர்)
10-30, 2-30
சிவகுமார்-சரிதா நடித்த
**வண்டிச்சக்கரம்**

**றீகல்** [யாழ் நகர்]
10-30, 2-15, 4-30 only
George C. Scott.. ...
TAPS
இராணுவவீரர்களின் போர் முறையும், பயிற்சித் திறமையும் உங்களுக்கும் உதவும்.

**ராஜா** (யாழ். நகர்)
Daily 10-30, 2-30, 6-30
முத்துராமன்-கவிதா
அசோகன்-தேங்.சீனிவாசன்
**காற்றினிலே வரும் கீதம்**
(ஈஸ்மன் கலர்-புதிய பிரதி)

**ஹரன்** (யாழ். நகர்)
10-30, 2-30,
4-30, 6-30
குறிப்பிட்டசில தினங்கள் மட்டும்
BLOOD OF THE DRAGON
(பயங்கர சண்டைகள் நிறைந்த படம்)

**லிடோ** சினிமா
Daily 4 Shows
CONAN THE BARBARION

**வெலிங்டன்**
(யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 4-45
Lee Marvin in
THE BIG RED ONE
(Adults Only)

**வின்ஸர்** (யாழ்)
10.30, 2.00, 4.30, 6.45
The B dy
(புத்தம் புதிய பிரதி)
வயதுவந்தவர்களுக்கு மட்டும்
பாலியல் கல்வியை வாலிபர் முதல் வயது வந்தோர் வரை படித்துணர வேண்டிய அவசியமான திரை ஓவியம். இதுவே கடைசிமுறையாக குறிப்பிட்ட நாட்களுக்கு மட்டும் காண்பிக்கப்படுகிறது.

**மனோகரா** (யாழ்நகர்)
முரளி-குயிலி-Y. விஜயா
கல்லாப் பெட்டி-சிங்காரம்
K. பாலச்சந்தரின்
**பூவிலங்கு**
தந்தையின் செல்வாக்கை பயன்படுத்தி ஒரு ஏழைப் பெண்ணின் சர்வகலாசாலை படிப்பிற்கு முற்றுப்புள்ளி வைத்தார். அவர் அந்த முற்கோபக்காரனை அவள் திருத்த முனைந்தாளா?
மிகுதி வெண்திரையில்.


# இன்றைய பலன்

மாதம்—ஐப்பசி
திகதி——25(10-11-1984)
வாரம்—சனி
திதி துதியை பின் இரவு 1-55 வரை
நக்ஷத்திரம்—கார்த்திகை 9-15ன் மேல் ரோகினி

மேடம்:- பணம் பறிபோவதற்கு இடம் ஏற்படலாம் முகமன் பேசுவோர் விடயத்தில் முன் எச்சரிக்கையுடனிருக்கவும்.

இடபம்;- கவலையின் தாக்குதலால் வேதனைப்படுவீர்கள் உடல் நலமும் சிறிது பாதிக்கப்படலாம் அவசரப் போக்கையும் ஆத்திர உணர்ச்சியையும் தவிர்க்கவும்.

மிதுனம்:-குடும்பத்தில் குதூகல நிகழ்ச்சிகள் இடம் பெறும் வெளியிடத்திலிருந்து மகிழ்ச்சிகரமான செய்தி யொன்று கிடைக்கலாம் பண வரவிற்கு இடமுண்டு.

கடகம்:- முன்னேற்றப் பாதையில் தடைகள் தென்படுகின்றன தொழில் புரியும் இடத்தில் தொல்லைகள் உருவாகும் சகோதர வழியால் சஞ்சலமுண்டு.

சிங்கம்:- வாகனம் செலுத்துவோருக்கு இன்று நன்மதிப்புக் கிடைக்கும் தாய்வழி தன வரவிற்கும் இடம் உண்டு கல்வித்துறையில் புதிய உற்சாகம் பிறக்கும்.

கன்னி:- தெளிந்த மனப் தெய்வ சிந்தை தேடியது கிடைக்கும் அமைதியுடன் ஆனந்த வாழ்வும் உண்டு

துலாம்:- நீண்ட நாள் உறவில் முறிவு ஏற்படலாம் கடமை யாற்றும் இடத்தில் சகாக்களுடன் சச்சரவுகளைத் தவிர்த்துக் கொள்ளவும் சமயோசித புத்தியினால் எதையுல் சமாளிக்கலாம்.

விருச்சிகம்:- வாழ்வுப் பயணத்தில் வளமான திருப்பங்கள் ஏற்படும் பந்துக்களின் கொண்டாட்டங்களும் பாவையர்களிப்பும் உண்டு.

தனுசு:- இயந்திரங்களுடன் பழகுபவர்கள் அதிக கவனம் செலுத்த வேண்டும் அரச பயத்திற்கும் இடமுண்டு தொழில் விடயத்தில் கவனம் வேண்டும்,

மகரம்:- இறை வழிபாடு மேலிடும் இதயத்தில் அமைதியும் ஏற்படும் முதியவர் ஒருவர் தக்கசமயத்தில் உங்களுக்கு ஆதரவு தருவார்.

கும்பம்;- தொழில் துறையில் வெற்றி விருந்தினர்கள வருகையுடன் வேடிக்கை பலவுண்டு இதயப்படுதாவில் இன்பத்தின் மின்னல்.

மீனம்:- இலட்சியப் பாதையை நோக்கி பயணம் ஆரம்பமாகும் எதிர்பார்த்த பொருள் வரவும் இன்று கிடைக்கலாம் பிள்ளை யொன்றின் முன்னேற்றம் மகிழ்ச்சியைத்தரும்.

**திருமலை**
**வே.ரவீந்திரன்**

## இந்திராவுக்கு

(3ம் பக் ம்5ம்கலத்தொடர்ச்சி)

பட பலர் உரைநிகழ்த்தினர்.

கட்டுவன் மேற்கு வளர்மதி சனசமூக நிலையத்தினர் வள்ளுவர் சனசமூக நிலையத்தினர் ஆகியோர் மறைந்த பிரதமருக்கு அஞ்சலி செலுத்தி துக்கம் அனுஷ்டித்தனர்.

வள்ளுவர் சனசமூக நிலையத்தினர் நிலைய முன்றலிலும், இராஜ இராஜேஸ்வரி ஆலய முன்றலிலும் உண்ணாவிரதம் இருந்தனர்.

இவர்களுடன் தெல்லிப்பழை பகுதிமக்கள், நாமகள் ச. ச நிலையத்தினர் இணைந்து நீண்ட மௌன ஊர்வலம் ஒன்றை நடத்தினர்.

கட்டுவன்புலம் மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற இரங்கல் கூட்டத்தில் வள்ளுவர் ச. ச. நிலைய போஷகர் திரு. த. தம்பிராசா உரைநிகழ்த்தினார்.


**றீகல் 'மினி'**
புதிய
தமிழ், ஆங்கில, ஹிந்தி
திரைப்படங்களுடன்,
ஆரம்ப நன்னாளை
விரைவில்
எதிர்பாருங்கள்.
650


## சிரமதானம்

(பண்டத்தரிப்பு)

சில்லாலை சுத்தோலிக்க சேமக்காலையை சிரமதானம் மூலம் சில்லாலை கிராம முன்னேற்றச்சங்கம் புனரமைப்புச் செய்தபோது, உதவியவர்களுக்கெல்லாம் சங்கத்தின் செயலாளர் டாக்டர் சுகந்தன் இன்னாசித்தம்பி இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துள்ளார்.

## ஈட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில் ஈடு /1698 இலக்க வழக்கில் வாதி திருநெல்வேலி, கலாசாலை வீதி, நடராசா குமாரசாமிக்கு விற்பனவு திகதிவரை போக வேண்டிய தீர்வைத்தொகை ரூபா 12,893-33சதமும் மேலும் இதில்10,000/- ரூபாவுக்கு 18-8-82 தொடக்கம் 23-11-83 வரை வருடமொன்றிற்கு 48%வீத வட்டியும் அதன்பின் சேர்ந்த முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை வருடமொன்றிற்கு 12% வீத வட்டியும் வழக்குச்செலவு 3094 ரூபாவும் விற்பனவுச் சலார்களும் இதில் வட்டியால் கொடுபட்ட3400/- ரூபா கழித்து மிகுதித் தொகையைப்பிரதிவாதிகளாகிய கொக்குவில் கிழக்கு முருகன்கந்தையாவிடமும் பெண் குலத்தரசியிடமும் அறவிடுவதற்காக எனக்களித்த அதிகாரத்தின்படி வழக்கில் சம்பந்தப்பட்ட கீழ் விபரிக்கப்படுமாதனம் 1984-ஆம் டிசம்பர் மாதம் 4-ம் திகதி (4-12-1984) காலை பத்து மணி தொடக்கம் அவ்வாதனத்துள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

### குறித்த ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கும், பகுதியும் நல்லூர், கோவிற்பற்று கோண்டாவில் இறை 'செருக்கற்புலம்' நில. பர. 7. இது உத்தரவுபெற்ற நில அளவைக்காரன் க ஐயாறு 6-2-78ல் அளந்து வரைந்த 2475ம் இலக்கப் படத்தின்படி நில. பர. 6. குளி 12.8 இது குறித்த படத்தில் துண்டுகள் 3, 4, 5, 6, 7 ஆக காட்டப்பட்டுள்ளது இந்த நில. பர. 6 குளி 12.8ல் தென்மேற்குப் பக்கமாக நில பர2 குளி 11 4 போக மிகுதியில் தென்மேற்குப் பக்கமாக நில. பர 2. இது குறித்த படத்தில் துண்டு 6 இந்த நில பர. 2 செய்பயிர் வான் பயிர்களும், எல்லை கிழக்கு: விற்பனவு காரரின் மிகுதி ஆதனம். வடக்கு; பண்டாரி பொன்னுவினுதனம். மேற்கு ஐயன் கந்தையாவினுதனம். தெற்கு; 2ம் ஆதனடாப்பில் விபரிக்கப்படுமாதனம் இதடங்கலும் டி. 444/106ல் பதியப்பட்டுள்ள ஆதனத்தில் உள்ள கிணறு. கிணறுத் தூர்வை நிலத்தில் இதற்குரிய பங்கும். குறித்த ஆதனத்தைப் பொதுப் பாதையாக ரேட்டுக்குப் போக்குவரவு செய்வதற்கும் பாவிக்கும் உரிமையும்.

வி. செ. குட்டிப்பிள்ளை,
விற்பனை ஆணையாளர்.

643, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
(661)


## சேவை

**வீடியோ புளொசம்ஸ்**

உங்கள் திருமண வைபவங்களையும் மற்றும் சகல வைபவங்களையும் சிறந்த முறையில் வீடியோ படமாக்கி கொடுப்போம்.

எங்கள் பணி இந்தியா, கொழும்பு போன்ற இடங்களிலும் சிறப்பாக நடைபெறுகிறது. இலங்கையின் வடபகுதியிலும் எங்கள் சேவை தொடர்கிறது. கலர் புகைப்படமும் எடுத்துக்கொடுக்கப்படும்.

**வீடியோ புளொசம்ஸ்**
30, சிவப்பிரகாசம் ரோட்,
வண்ணார்பண்ணை, (658) யாழ்ப்பாணம்.


**சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்**
(வரை உள்ளது)

## கிறே நைலக்ஸ் விற்பனை

**பாவு 140'' ஊடை 72'' அகலம் 46''**


மேற்குறிப்பிட்ட அளவினை உடைய கிறே நைலக்ஸ் விற்பனைக்குண்டு. விரும்புவோர் ஒரு மீற்றர் விலையைக் குறித்து ''தலைவர்'' சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், சங்கானை என்ற விலாசத்திற்கு 20-11-84-ந் திகதிக்கு முன்பு அனுப்பி வைக்கவும்.

தலைவர்,
சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்,
சங்கானை.

7-11-84. (660)

## 31 வது நாள் நினைவஞ்சலி

தோற்றம்: 26 — 02 — 1925



மறைவு: 11 — 10 — 1984

**அமர கார்த்திகேசு செல்லையா**

(முன்னாள் க. கி. ச. தலைவர், சமாதான நீதவான்)

எங்கள் குடும்ப ஒளிவிளக்காய் இதயகீதமாய் திகழ்ந்து எங்களை எல்லாம் ஏங்க வைத்த தெய்வமே உங்கள் அன்பு மனைவி, பிள்ளைகள், மருமக்கள், உடன்பிறப்புக்கள் அனைவரையும் ஆறாத்துயரில் ஆழ்த்தி சென்றுவிட்டீர்களே! உங்கள் நினைவு நாளில் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

அவர் பிரிவால் கலங்கும்
**மனைவி, பிள்ளைகள், மருமக்கள்.**

''நிறைமதி'',
11/3, முரசுமோட்டை, பரந்தன். (655)

## நல்லின பாற் பசுக்கள் காளைகள் தேவை

எமது சங்கத்தின் அங்கத்தவர்கட்குக் கடன் அடிப்படையில் வழங்குவதற்காக சகிவால் சிந்தி உள்ளூர் கலப்பின பசுக்கள், இந்திய கீர் உள்ளூர் கலப்பினப் பசுக்கள், யேசி உள்ளூர்கலப்பினப் பசுக்களையும், ஐரோப்பிய வர்க்கக் கலப்பினபசுக்களையும், இதே இனக் காளைகளையும் பால் உற்பத்தியை பெருக்குவதற்காக யாழ்ப்பாணம் மாவட்டத்திலிருந்தும், வவனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டத்திலிருந்தும் சங்கம் நேரடியாக கொள்வனவு செய்ய விரும்புகிறது பசுக்கள் ஆகக்கூடியது இரண்டுகன்றுஈன்றவையாகவும், கன்னியாகவும், இளமையாகவும் காளைகள் மூன்று வயதுக்கும் மேற்படாதவையாக இருத்தல் வேண்டும். இவற்றை விற்க விரும்புபவர்கள் தனித்தனியாக இனம் வயது, உயிர் நிலையில் கிலோ கிராமுக்கு விற்கவிரும்பும் விலை அல்லது கறக்கும் பால் அளவில் விற்க விரும்பும் ஆகக்குறைந்த விலை, தற்போது பால் கறக்கும் அளவு நிறம் என்பனவற்றையும், தாங்கள் குறிப்பிட விரும்பும் விசேட தன்மைகள் ஏதுமிருப்பின் அவற்றையும் விரிவாகக் குறிப்பிடுவதுடன் மிருகவைத்திய அதிகாரியுடனும், அங்கத்தவர்களுடனும் நேரடியாக பார்வையிட வாகனத்தில் வந்து சேர வசதியாக தங்கள் வீட்டைச் சென்றடையும் வழியைக் குறிக்கும் வரை படத்தையும் இணைத்து கடிதமூலம் தலைவர், மன்னார் மாவட்ட பாற்பண்ணை அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், திட்டமிடற் கிளை, கச்சேரி, மன்னார் என்ற விலாசத்திற்கு 20-11-1984க்குக் கிடையில் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

கூட்டுறவுச் சேவையிலுள்ள

**தி. இராசநாயகம்,**
தலைவர்,
மன்னார் மாவட்ட பாற்பண்ணை அபிவிருத்திக்
கூட்டுறவுச் சங்கம்,
(வரைவுள்ளது)

664

# "பயங்கரவாதத்தை முறியடிக்க இந்தியாவுடன் ஒத்துழைக்கவேண்டும்"

## ஜனுதிபதி செயலகம் அறிக்கை

[கொழும்பு]

பயங்கரவாதத்தை முறியடிக்க இந்தியாவுடன் சேர்ந்து ஒத்துழைக்கவேண்டும் என்று எதிர்பார்ப்பதாக ஜனுதிபதி செயலகம் நேற்று வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது: "சில சீக்கியர்கள் 'காலிஸ்தான்' என்ற தனியான அரசை அமைக்கவேண்டும் என்று கோருகிருர்கள். சில தமிழர்கள் 'ஈழம்' என்ற தனியான அரசை அமைக்கவேண்டும்என்கிருர்கள்.

"அரசைநிறுவமுற்பட்டுள்ள இரு இயக்கங்களும், பயங்கரவாத அடிப்படையைக் கொண்டு சொந்த வழிமுறைகளைக் கையாண்டுவருகின்றன.

"இவ்விரு நாட்டு மத்திய அரசுகளும், இப்பிரச்னைகளை அரசியல் அமைப்பு ரீதியாக சமாதானமாகத் தீர்க்க நடவடிக்கை எடுத்துள்ளன. இரு அரசுகளும் பிறநாடுகள் தலையிட்டுவருவதாக குற்றம்சாட்டியுள்ளன.

"இந்தியாவில் பயங்கரவாத நடவடிக்கையில் சிலசீக்கியரும் இலங்கையில் பயங்கரவாத நடவடிக்கையில் சில தமிழரும் ஈடுபட்டுள்ளனர். இந்தியாவில் கொலைசெய்யப்பட்டவர் இந்துமதத்தவர். இலங்கையில் கொலைசெய்யப்பட்ட இராணுவத்தினர் 12 பேரும் பௌத்த மதத்தவர் இந்தியாவில் சினம் கொண்ட சில இந்துமதத்தவர் சீக்கியரைப் படுகொலை செய்தனர். இலங்கையிலும் அதேபோல் சில சிங்களவர் அப்பாவித் தமிழர்களைக் கொலைசெய்தனர்.

"இந்தியாவிலும், இலங்கையிலும் நடந்த ஒவ்வொரு செயலும் பிழையானதும் மனிதத் தன்மையற்றதுமாகும்.

ராஜீவ் அரசும், இலங்கை அரசும் இப்படியான செயல்களுக்கு ஒருபோதும் ஆதரவளிக்காது. இரு அரசுகளும் இன மத உறவு சகிப்புத்தன்மைக்கு ஆதரவளித்து ஊக்குவிக்கின்றன." [க]

# திருமலை பிரஜைகள் குழு அமைச்சர் லலித் சந்திப்பு

[திருகோணமலை]

திருகோணமலையில் கைது செய்யப்பட்டுள்ள தமிழ் இளைஞர்கள் குறித்து தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலியுடன் திருகோணமலை பிரஜைகள் குழு நேரில் பேச்சு நடத்தியது.

திரு. லலித் நேற்று மாலை திருகோணமலைக்கு விஜயஞ் செய்தார் அவர் இங்கு கடற்படைத் தளத்தில் உயரதிகாரிகளைச் சந்தித்து திருமலைப் பாதுகாப்பு நிலைமைகள்பற்றி ஆராய்ந்தார்.

அமைச்சர் திரு லலித் அத்துலத்முதலியை இத்தளத்தில் வைத்தே திருகோணமலை பிரஜைகள் குழுவினர் சந்தித்துப் பேசினர். சுமார் 4 பேர் இக்குழுவில் அங்கம் வகித்தனர்.

அமைச்சர் இவர்களின் விளக்கங்களைக் கேட்டறிந்தார். அத்துடன் ஆவன செய்வதாகவும் உறுதியளித்தார்.

அமைச்சர் நேற்று மாலையே ஹெலிகாப்டர் மூலமாக கொழும்பு திரும்பிஞர். (கி)

# சடலம் அடையாளம் காணப்பட்டது

(வவனியா)

துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியாகி வவனியா ஆஸ்பத்திரி பிரேதச் சாலையில் வைக்கப்பட்டிருந்த சடலம் அவரின் தாயாரினுல் அடையாளம் காணப்பட்டது,

இறந்தவர் கோவில்குளத்தைச் சேர்ந்த கனகரத்தினம் மகேந்திரன் என்று அடையாளம் காணப்பட்டது.

பிரேத பரிசோதனையின் பின்னர் உடனடியாகத் தகனம் செய்யவேண்டும் என்ற நிபந்தனையின் பேரில் சடலம் தாயாரிடம் ஒப்படைக்கப்பட்டது. பொதுமயானத்தில் சடலம் தகனம் செய்யப்பட்டது. [க]

# லலித் வவனியா விஜயம்

[வவனியா]

தேசிய பந்தோபஸ்துஅமைச்சர் திரு. லலித்அத்துலத்முதலி இன்று வவனியாவுக்கு விஜயம் செய்கிருர்.

வவனியாவில் புதிதாக நிறுவப்பட்டுள்ள ஆயுதப்படைத் தலைமை அலுவலகத்தை உத்தியோக பூர்வமாக அமைச்சர் திறந்துவைப்பார்.

தச்சன்குளத்தில் அமைந்துள்ள விமானப்படைத் தளத்திற்கு அருகில் புதிய கட்டிடம் உள்ளது.

# பத்திரிகைகளுக்கு எதிரான வழக்கு: ஜனவரி 25க்கு ஒத்திவைப்பு

(கொழும்பு)

பத்திரிகைகளுக்கு எதிராக சத்தியப்பிரமாணம் தொடர்பாக சட்டத்தரணி குமார் பொன்னம்பலம் தாக்கல் செய்க மனுமீதான விசாரணை மீண்டும் எதிர்வரும் ஜனவரி 25ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது

இம்மனுமீதன வழக்கு கொழும்பு மேலதிக மஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் பதில் மஜிஸ்திரேட் திரு. இ ஏ ரி வில்வராஜா முன்னிலையில் நேற்று விசாரணைக்கெடுக்கப்பட்டது

'ஈழநாடு' பத்திரிகை சார்பில் பதில் ஆசிரியர் திரு. பி. எஸ் பெருமாள் சமுகமளித்திருந்தார்.

'டெய்லி நியூஸ்', 'ஐலண்ட்' 'திவயின' பத்திரிகைகளின் பிரதிநிதிகளும் சமுகமளித்திருந்தனர்.

'ஈழநாடு' சார்பில் ஜனுதிபதி அப்புக்காத்து ஜோர்ஜ் கந்தப்பா, சட்டத்தரணிகள் எஸ் சிற்றம்பலம், சந்திரசிறி அல்விஸ் ஆகியோர் ஆஜராகினர். [இ-வெ]

## அகில உலக அகண்டநாம பஜனை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பகவான் ஸ்ரீ சத்தியசாயி சேவா சமித்தியின் ஆதரவில் அகில உலக அகண்ட நாமபஜனை இன்றும் நாளையும் நடைபெறும்.

திருநெல்வேலி தெற்குசேர் பொன். இராமநாதன் வீதியில், பகவான் ஸ்ரீ சத்திய சாயிசேவா சமித்திமண்டபத்தில் நடைபெறும் மேற்படி பஜனையில் யாழ். சமித்தி. பாலவிகாஸ், சித்தங்கேணி மண்டலி, அளவெட்டி மண்டலி, உரும்பராய் மண்டலி, சுண்டிக்குளி மண்டலி, சாவகச்சேரி மண்டலி, நல்லூர் முத்திரைச்சந்தை மண்டலி, அரியாலை மண்டலி ஆகியவை கலந்துகொள்ளும்

இன்று மாலை 4-45-க்கு கொடியேற்றமும் அதனைத் தொடர்ந்து அஸ்டோசதிரம் தீபாரதனையும், மாலை ஐந்து மணிக்குப்பின்னர் பஜனையும் இடம்பெறும்.

## மரண அறிவித்தல்

### திரு. சின்னத்தம்பி துரைச்சாமி (பத்தர்)

நாவற்குழி கிழக்கைச் சேர்ந்த சி. துரைச்சாமி பத்தர் காலமாகிவிட்டார். இவர் செல்லம்மாவின் அன்புக் கணவரும் கனகம்மா, சிவபாக்கியம், தியாகராசா, பஞ்சாட்சரம், சரஸ்வதி, சிவமணி (வருமான வரி இலாகா), மயில்வாகனம் [சுவிஸ்லாந்து] ஆகியோரின் அன்புத் தந்தையும் வல்லிபுரம், ஜெகநாதன், கனகரத்தினம், தங்கரத்தினம், சாந்தலட்சுமி, அனுசூயாவதி (சுவிஸ்லாந்து) ஆகியோரின் அன்பு மாமனுரும் ஆவார். அன்னுரின் ஈமக்கிரியை 10-11-84 சனிக்கிழமையன்று முற்பகல் 10-00 மணியளவில் அன்னுரின் இல்லத்தில் இருந்து எடுத்துச்செல்லப்பட்டு பிணமுருங்கை மயானத்தில் நடைபெறும்.

686

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்க அச்சகத்தில் 1984ம் ஆண்டு நவம்பர் மாதம் 10-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post office Sri Lanka under Eelanadu B 100236/81 Eelanadu P. O. Box 49, Telegram Tephone number 22389 - 24126

## படுகாயமடைந். .

(1-ம் பக்க 3ம்கலத்தொடர்ச்சி)

ந செல்லத்துரை (43-வயது) கொக்குவில்மேற்கு, கந்தையா நடராசா (34-வயது) கில்னர் வீதி-இவர் சுவீப் விற்பவர், கே. மாணிக்கவேலு (56-வயது சீனியர்லேன் கலட்டி), பி. கிருஷ்ணன் (42-வயது) புன்னலைக்கட்டுவன் தெற்கு இவர் வ பி. போ. வ சபை பஸ் சாரதி, பெ விசுவலிங்கம் (60-வயது) மன்னுர், கே. எஸ். எஸ். தாஸ் (62-வயது) திருநெல்வேலி, எல் அழகரத்தினம் 44-வயது )புன்னலைக்கட்டுவன், இவர் வ. பி போ. வ. சபை பஸ் நடத்துநர், எஸ். தியாகராசா (45வயது) ஆசீர்வாதப்பர்வீதி நல்லூர்) யாழ் றேடியோஸ்பதி, எம். தங்கராசா (25-வயது) யாழ். அம்பலவாணர் அன்சன்ஸ் இவர் ஹட்டனைச் சேர்ந்தவர்), செ வேதநாயகம் (39 வயது - ஊர்காவற்றுறை கிழக்கு-இவர்கரையூரில்மேசன் வேலை செய்பவர்), அன்ரனிப்பிள்ளை சிறி (62 வயது- கில்னர் வீதி - இவர் சுவீப் விற்பவர்), க. வேலுப்பிள்ளை (63 வயது - விநாயகர்வீதி-நல்லூர்வடக்கு) ப. புஷ்பநாதன் (27 வயது - உரும்பராய்தெற்கு - இவர் யாழ்.மெற்றல் ஸ்தாபனத்தில் வேலைசெய்பவர்), எஸ். ஆர் செல்வராசா (29வயது சாங்கேசன்துறை வீதி யாழ்ப்பாணம் - இவர் முந்திரிகைப்பழம் விற்பனை செய்தவர்). எம். சிவலோகநாதன் (35வய - கந்தர் மடம்), என் நடராசா (64 வயது-முல்லைத்தீவு)ஆ கணேசலிங்கம் 28 வயது - மடுவில் தெற்கு). ஏ சர்வானந்தராசா (27 வயது-அம்பலவாணர் அன்சன்ஸ்)

வ பி போ. வ. சபை பஸ்களை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டதால். சாரதி, நடத்துநர், பிரயாணிகளில் சிலர் இறந்தும், பலர் படுகாயமடைந்தும் உள்ளனர்

இரு குண்டுகளும் வெடித்த இடத்தின் வீதி எதுவிதத்திலும் பாதிக்கப்படவில்லை. கட்டிடங்களுக்கும் சேதமேற்படவில்லை. (மா)

# இப்படியும் நடக்கிறது

நேற்று மாலை ஆறு மணியளவில் பலர் திடீரென மயக்கமடைந்துவிட்டனர்!

உடனடியாக அவர்கள் மீது தண்ணீர் தெளிக்கப்பட்டதைத் தொடர்ந்து சிலர் கண்விழித்தனர்.

"என்ன சங்கதி?" என்று இவர்களிடம் கேட்ட போது......

"வானெலிச் செய்தியைக் கேட்டோம். மயக்கம் ஏற்பட்டுவிட்டது... ..." என்று பதிலளித்தனர்.

"நீங்கள் சொல்வது ஒன்றும் புரியவில்லை......" என்று திருப்பிக் கூறியபோது......

"யாழ்ப்பாணம் கச்சேரி வீதியில் இன்று பிற்பகல் ரோந்து புரிந்த ராணுவத்தினர் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. கச்சேரி வீதியிலுள்ள ஒரு மேல் மாடிக் கட்டிடத்திலிருந்து கைக்குண்டுகள் வீசப்பட்டதுடன் சுழல் துப்பாக்கிகளினுலும் சுடப்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டது....." என்று இலங்கை வானெலி தனது ஆறுமணிச் செய்தியில் கூறியதும், அதிர்ச்சியினுல் மயங்கிவிழுந்துவிட்டோம்......" என்று விளக்கினர்.

யாழ். நகர வாசகர்களுக்கு சமர்ப்பணம்.

— 'ஊடுருவி'

## யாழ் நகர் சம்பவங்கள்:

# அரச அதிபர் 'லலித்'துக்கு விளக்கினுர்

[யாழ்ப்பாணம்]

யாழ் நகரில் நேற்று இடம்பெற்ற சம்பவங்கள் பற்றி யாழ். அரசாங்க அதிபர் திரு எம் பஞ்சலிங்கம் வட பகுதி இராணுவ இணைப்பதிகாரி பிரிகேடியர் நளின் செனவிரத்னவுடன் தொடர்புகொண்டு சம்பவங்களை விளக்கினுர்.

நேற்று இடம்பெற்ற சம்பவங்களில் பலியானவர்கள், காயப்பட்டவர்கள்பற்றிய விபரங்களையும் திரு. பஞ்சலிங்கம் இராணுவ இணைப்பதிகாரிக்கு எடுத்துரைத்தார்.

இன்று யாழ் நகருக்கு இராணுவத்தினர் வரமாட்டார்களென்று இராணுவ இணைப்பதிகாரி, யாழ். அரசாங்க அதிபரிடம் தெரிவித்திருந்தார். ஆனுல் யாழ். ரயில் நிலயத்திற்கு இன்று இராணுவத்தினர் வழமைபோல் வருவார்களென்றும் இராணுவ இணைப்பதிகாரி யாழ். அரச அதிபரிடம் தெரிவித்துள்ளார்.

யாழ். நகரில் நேற்று இடம்பெற்ற சம்பவங்கள் பற்றி பாதுகாப்பு அமைச்சின் செயளாளர் திரு. சேபால ஆட்டிக்கலவிற்கும் விளக்கியதாக யாழ். அரச அதிபர் தெரிவித்தார்

### 'லலித்'துக்கும் விளக்கினுர்

யாழ். நகரில் நேற்று இடம்பெற்ற அசம்பாவிதங்கள்பற்றி யாழ். அரச அதிபர் திரு எம். பஞ்சலிங்கம் தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலியுடன் நேற்றுத் தொடர்புகொண்டு விளக்கினுர்

யாழ். நகருக்கு இன்று இராணுவத்தினர் வருவதற்கு அனுமதிக்கப்படமாட்டார்களென்று அமைச்சர் அத்துலத்முதலி யாழ். அரச அதிபரிடம் தெரிவித்தார்

தேசிய பந்தோபஸ்து அமைச்சின் செயலாளர் திரு சிறிவர்த்தனுவிற்கும் இச்சம்பவயபற்றி யாழ். அரச அதிபர் எடுத்துரைத்தார்.

## கொழும்பில்...

(1ம் பக்க 5ம்கலத்தொடர்ச்சி)

தினசபாபதியாவார் தமிழ் நாட்டில் பயிற்சிபெற்றவர்கள் இந்த இயக்கத்தில் இருக்கிருர்கள்.

'இதன் தலைவர் 1979ம் ஆண்டு லெபனுனில் பயிற்சி பெற்றவர். இவர் உமா மகேஸ்வரனுடன் நெருங்கிய தொடர்புள்ளவர்.

"ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, தமிழீழ விடுதலைக் கழகம் ஆகியவற்றுடன் இந்த இயக்கம் நெருங்கிய தொடர்புடையது." என்ருர். [இ]

## 6 பேர் கைது

(கல்வியங்காடு)

அரியாலையில் உள்ள ஒரே வீதியில் வசிக்கும் ஆறுவாலிபர்களை ஆயுதப்படையினர் கைதுசெய்து அழைத்துச் சென்றுள்ளனர்.

அரியாலை மேற்கு திருமகள் வீதியில் வசிப்பவர்களே அவரவர் வீட்டில்வைத்து இரவு நேரத்தில் கைதுசெய்யப்பட்டவர்களாவர்.

வியாழன் இரவு எட்டு வாகனங்களில் வந்த ஆயுதப் படையினர், திருமகள்வீதிக்குச்சென்று துப்பாக்கி வேட்டுக்களைத்தீர்த்தனர். இதனுல் அப்பகுதிமக்கள் திகில் கொண்டு அங்குமிங்கும் ஓடினர் திருமகள் சனசமூக நிலையத்துக்குச் சென்றும் தேடுதல் நடத்தினர்.

கனகரத்தினம் வீதிவழியாக வந்துகொண்டிருந்த சின்னத்துரை என்பவரும் கைதுசெய்யப்பட்டார். கனகரத்தினம் வீதியில் வசிக்கும் பழனிஎன்ற நபரைக் கைதுசெய்து விசாரணையின்பின்னர் விடுவித்தனர்.

இச்சம்பவங்களால் இப்பகுதிமக்கள் இடம்பெயர்ந்துள்ளனர்.